திராவிடநாடு

13—8—61 | வார வெளியீடு | விலை 16 காசு

திரு. தேவராசனார் அவர்கள்



மறைவு 7—8—61.

தி.மு.கவும்-கலையும்

எஸ். எஸ். இராஜேந்திரன்

கலை என்று சொன்னவுடனே அதை ஓவியக்கலை என்றும், நாட்டியக்கலை என்றும், சிற்பக்கலை என்றும் இன்னும் கலை என்ற சொல்லுக்குள்ளே பல பிரிவுகளை அடக்கமுடியும் என்றாலும் கூட, இன்றைய தினம் நாட்டிலே கலை என்று சொன்னவுடனேயே அது சினிமாக்கலை — நாடகக்கலை என்பதைத்தான் குறிக்கிறது! ஏன் அப்படிக் குறிக்கிறது என்றால் மற்றக் கலைகள் ஓரளவுக்கு மங்கி இது ஒளிவிட்டுப் பிரகாசிக்கிறது என்று கூடச் சொல்லமுடியும்—என்றாலும் சினிமாக்கலை, நாடகக்கலை மக்களுடைய உள்ளங்களைக் கவர்ந்திருக்கிறது என்றால் அதற்குக் காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான். நடிகர்கள் அரசியலைப்பற்றிக் கவலைப்படாதவர்களாக, இனத்தைப்பற்றி, மொழியைப்பற்றி, நாட்டைப்பற்றி, உலகத்தைப்பற்றி கவலைப்படாதவர்களாகக், "கண்டதே காட்சி கொண்டதே கோலம்" என்று அலைந்துகொண்டிருந்த அந்தக் காலத்திலே, இந்த நாடகக்கலை, சினிமாக்கலை மக்களுடைய உள்ளத்தை அவ்வளவாகத் தொடவில்லை. ஆனால் இந்தக் காலத்திலே சினிமாக்கலை, நாடகக்கலை மக்களுடைய உள்ளத்தை வெகுவாகத் தொட்டிருப்பதற்கான காரணம் திராவிட முன்னேற்றக் கழகம்தான் என்று அழுத்தம் திருத்தமாக மறுபடியும் மறுபடியும் சொல்லிக் கொண்டிருப்பதிலே தவறில்லையென்று நான் திட்டவட்டமாகக் கருதுகிறேன்.

சிலபேர் கலையை வாழ்வதற்காகவே வைத்துக்கொண்டிருக்கின்றார்கள்—சிலபேர் கலையை வாழ்வதற்காக வைத்துக்கொண்டிருந்தாலும் கலையை மானத்தோடு வாழ்வதற்காக வைத்துக்கொண்டிருக்கிறார்கள்—அத்தகைய கலைஞர்கள்தான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இடம் பெற்றிருப்பவர்கள் என்பதை நான் மிகப்பணிவோடு சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதுமட்டுமல்ல, இன்றையதினம் கலை என்றுசொன்னவுடனே நாடகக் கலை, சினிமாக்கலை மக்கள் நினைவுக்கு வருகிறது என்று குறிப்பிட்டேன்—மக்கள் நினைவுக்கு மட்டுமல்ல—மந்திரிகள் நினைவுக்குக்கூட கலை என்று சொன்னவுடனே சினிமாக் கலை நாடகக்கலைதான் நினைவுக்கு வருகிறதே தவிர, வேறு எதுவும் அவர்கள் சிந்தனையை இந்த நேரத்திலே கிளறிவிடுவதாகத் தெரியவில்லை.

ஏன் என்று கேட்டால், பத்துப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னாலே சீந்துவாரற்றுக் கிடந்த நாடகக்கலை—சீந்துவாரற்றுக் கிடந்த சினிமாக்கலை, சினிமாக்காரர்களையும் நாடகக்காரர்களையும் பார்க்கின்ற நேரத்திலே, இதோ போகின்றான் பார் கூத்தாடி என்று ஏதோ ஒரு வேடிக்கைப் பொருளைப் பார்ப்பதைப்போல பார்த்து மகிழ்ந்த அந்தக் காலத்திலே — நிச்சயமாகச் சினிமாக்கலை நாடகக்கலை மக்களுடைய கவனத்தைக் கவரவில்லை என்றாலும், பதினைந்துஆண்டுகளுக்குள்ளாக இத்தகைய மாற்றத்தைச் செய்தவர்—உண்மையிலேயே இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற நம்முடைய தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள்தான்.

ஆகவேதான் நம்மையெல்லாம் திட்டுவதற்கு மந்திரிமார்களுக்கு வாசகம் கிடைக்காமல், நம்முடைய மதிப்புக்குரிய தலைவர் பெரியார் இராமசாமி அவர்களுக்குப் பேசுவதற்கு வார்த்தை கிடைக்காமல் எடுத்த எடுப்பிலேயே நம்மைச் சினிமாக்காரர்களென்றும் மிகச் சுலபமாகத் திட்டித் தீர்த்து தங்களுக்குள்ளாகவே ஒரு பெருமூச்சு விட்டுப் பெரிய காரியத்தை சாதித்துவிட்டதைப்போல இன்றைய தினம் நிம்மதியாகத் தூங்குகின்ற அத்தகைய காட்சியை நாம் பார்க்கின்றோம்.

நாம் எல்லாம் கவனத்திலே வைத்துக்கொள்ளவேண்டும்—நடிகனுக்கு அரசியல் கூடாது என்று ஒரு பக்கத்திலே புலம்பல் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறது — இன்னும் ஓயவில்லை. கலைஞர்களுக்கு கட்சி கூடாது என்கிற அத்தகைய ஒரு குரல் ஒரு புறத்திலிருந்து கிளம்பிக் கொண்டிருக்கிறது—அது இன்னும் ஓயவில்லை! யார் யாரோ சொல்லிப் பார்த்தார்கள்—இங்கேயிருந்து போனவர்கள் சொல்லிப்பார்த்தார்கள் — ஆனாலும் ஏன் சொல்லுகிறார்கள் — எதற்காகச் சொல்லுகிறார்களென்பதைத்தான் நாம் மிக நன்றாக உன்னிப்பாகக் கவனித்துப் பார்க்கவேண்டும். காங்கிரஸ்காரர்கள் திரு. காமராஜர் அவர்கள் உட்பட மற்ற மற்ற அவர்களது தொண்டரடிப் பொடியாழ்வர்களெல்லாம் நடிகர்களுக்கு அரசியலா? கலைஞர்களுக்கு அரசியலிலே ஆதிக்கமா? என்கின்ற அருவருப்பைக் கொட்டிக்கொண்டிருக்கின்ற அத்தகைய காட்சியை நாம் பார்க்கின்றோம்.

நடிகர்கள் அரசியல் பேசக் கூடாது என்று சொல்லுவது — கலைஞர்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று சொல்லுவது — எந்த ஆதாரத்தை வைத்துச் சொல்லுகிறார்களென்பதைத்தான் நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ள ஆசைப்படுகிறேன்!

இது நாள் வரையிலே கலைஞர்கள் அரசியலைப்பற்றிப் பேசியது கிடையாதா? நம்முடைய மதிப்புக்குரிய மாற்றுக் கட்சித் தோழர்களுக்கு நினைவுபடுத்த ஆசைப்படுகின்றேன் — உங்களால் எம். எல். சி. ஆக்கப்பட்ட கொடுமுடி கோகிலம் கே. பி. சுந்தராம்பாள் தேசியத்தை வளர்ப்பதற்காக இந்த நாட்டிலே அரசியல் பேசவில்லையா? அரசியல் கருத்துக்கள் பொதிந்துள்ள பாட்டுக்கள் பாடவில்லையா? திருமங்கலத்தைச் சேர்ந்த விஸ்வநாததாஸ் "கொக்கு பறக்குதடி பாப்பா" என்ற பாடலைப் பாடவில்லையா? அதற்காகச் சிறைக் கம்பிகளை எண்ணவில்லையா? "கரம் சந்திர மோகனதாஸ் காந்தி-இந்திய தேச சுதேச கதர்க் கப்பல் கொடி தோணுதே" என்ற பாடலைப் பாடிவிட்டு வெள்ளையர்களால் தண்டிக்கப்படவில்லையா?

ஆனாலும் அவைகளையெல்லாம் மறந்துவிட்டு வெள்ளையனுடைய ஆதிக்கத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டிய அத்தகைய விஸ்வநாததாஸ் போன்ற பெரிய தியாகிகளின் குடும்பங்களை நடுத்தெருவிலே அலைய விட்டுவிட்டு இன்றைய தினம் நடிகர்கள் அரசியல் பேசக்கூடாது என்று சொன்னால் அது எதைக்காட்டுகிறது?

(4-ம் பக்கம் பார்க்க)

ர் 20] ஆண்டு சந்தா ரூ. 8 (13—8—61) தனிப்பிரதி 16 காசு [இதழ்

நல்ல நண்பரை இழந்தோம்.

எமது உற்ற நண்பர்களில் ஒருவரான டிபுள்யு. கே. தேவராசனூர் அவர்கள் திடீரென இயற்கை எய்திவிட்டார் என்ற செய்தி எம்மை மீளாத் துயரத்தில் ஆழ்த்தி விட்டது.

இருபதாண்டுகட்கு மேலாகவே நமது கழத்தோடு தொடர்புகொண்டிருந்த அவர், நமக்கெல்லாம் நல்ல தொரு நண்பனுக இருந்து, நல்லபணிபுரிந்துள்ளார்.

கழகம் நாளுக்கு நாள் வளருவதைக்கண்டு பெரு மிதமும் பூரிப்பும்கொண்டவர்.

நெருக்கடியான நேரங்களில் நல்ல யோசனைகளைக் கூறி நிலைமைகளைச் சமாளிக்கச் செய்வதில் அவர் பெருந்துணைபுரியக்கூடிய ஆற்றலைப் பெற்றிருந்தார்.

சோர்வடைந்த நிலையில் இருப்பவர்களுக்கு உற்சாகமூட்டி நல்லதொரு முடிவை உண்டாக்குவதில் அவர் ஒரு தனிச் சிறப்பைப் பெற்றிருந்தார்.

சோர்வையோ சோம்பலையோ அவரிடம் காண முடியாது.

ஓய்வற்ற தளரா உழைப்பால் உயர்ந்தவர்களில் நமது நண்பர் தேவராசனுரும் ஒருவராவர்.

சாதாரண உழைப்பாளியாக வாழ்க்கையைத் தொடங்கிய அவர், நல்ல பல ஊதியமளிக்கும் தொழில்களுக்கு உரிமையாளராகி உயர்ந்த நிலையினைப் பெற்றிருந்தார்.

நல்ல உள்ளம் கொண்ட அவரை நாம் இழக்க நேர்ந்தது, ஈடுசெய்யமுடியாத ஒரு பெரும் நட்டமாகும்.

இன்னும் பலகாலம் நம்மோடிருந்து நல்லபல பணிகளில் ஈடுபட்டுப் பெயரும் புகழும் பெறக்கூடிய நிலையினைப் பெற்று வருகிருர் என்ற எண்ணம் ஈடேறமுடியாதபடி இயற்கை அவரைத் தன்பால் ஈர்த்துக் கொண்டது.

கடைசியாக, அவர் பச்சையப்பன் கல்லூரியின் பொறுப்புக் குழுவினரில் ஒருவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுக் கல்லூரியின் ஆக்கத்தில் நல்ல ஊக்கம் காட்டிப் பணிபுரிந்து வந்தார்.

காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரியின் வாழ்வுக்கும் உயர்வுக்கும் அயராது போராடினுர். அவர் மனத்தில், அந்தக் கல்லூரி தழைத்துச் செழித்துப் படர்ந்து விளங்கவேண்டும் என்ற வேட்கை மிகுந்திருந்தது.

காஞ்சிபுரம் வட்ட நிலஅடமான பாங்கின் துணைத் தலைவராக இருந்து ஏழை எளியவர்களுக்கு ஏற்ற பல உதவிகளைச் செய்த செம்மல் அவர்.

பிறந்த ஊரான வாலாஜாபாத்தின் ஊராண்மைக் கழகத்தின் தலைவராகவிளங்கி, ஊரின் நலத்திற்கென்று அரும்பாடுபலபட்டார்; பெருமைப்பட வாழ்ந்தார்.

எந்த ஒரு காரியத்தையும் இப்படிச் செய்யலாமா? அப்படிச் செய்யலாமா? என்று மற்றவர்கள் திகைத்து நிற்கும்போது, நண்பர் தேவராசனுர் திடீரென்று ஒரு யோசனையைக் கூறி மற்றவர்களின் திகைப்பையும் சிக்கலையும் எளிதாகப் போக்கிவிடக்கூடியவர் என்று பலரும் கூறி அவரைப் பாராட்டும் நிலையினைப் பெற்றிருந்தார்.

காஞ்சிபுரம் நகரமக்களுக்கு வசதியாக ஐந்தாறு பெரிய பஸ்களை வைத்து நடத்திவருகிருர். இது போலவே, திருவள்ளூர், செம்மலை போன்ற இடங்களிலும் நெடுந்தூரப் பிரயாணிகளுக்குப் போக்குவரத்து வசதிக்காகப் பல பஸ்களை வைத்து நடத்தி வருவது பலரும் அறிந்ததே.

பல துறைகளிலும் பொதுநலப் பணி புரிவதென்றுல், அவருக்கு ஒரு தனி ஆர்வம் உண்டு.

இலாப நட்டத்தைப்பற்றிக் கணக்குப்பாராது, எடுத்துக்கொண்ட காரியத்தை எப்படியாவது முடித்துவிடவேண்டும்மென்பதில் ஈடுபடும்போது, அவரது நண்பர்கள் யாராவது தலையிட்டு, உங்களுக்கேன் இதெல்லாம், இதில் நீங்கள் தலையிட்டால் நட்டந்தான் வரும் என்று கூறினுல், "பரவாயில்லை, நட்டம் ஏற்பட்டாலும் நல்லதென்று எனக்குப்பட்டதைச்செய்யும் பழக்கத்தை உடையவன்" என்று கூறிவிடுவார்.

பகலெல்லாம் கருமமே கண்ணுயிருந்து காரியத்தைச் சாதிக்கும் திறன் படைத்த இவர், இரவெல்லாம் தமது நண்பர்களுடன் அளவளாவி மகிழ்வதில் சலிப்போ களைப்போ கொள்ளமாட்டார்.

இப்படிப்பட்ட ஒரு நல்லவரை — நண்பரை இழந்தோம்.

குடும்பம் தங்கள் பாதுகாவலனை இழந்துவிட்டது.

அவரது பிரிவால் வருந்தும் குடும்பத்தினருக்கும் உறவினர் நண்பர்களுக்கும், புதல்வன் நடராசனுக்கும் எமது ஆறுதல் மொழிகளை உரித்தாக்குகிருேம்.

2-ம் பக்கத் தொடர்ச்சி

• நடிகர்கள் அரசியல் பேசக்கூடாது என்று சொல்லுவது-திராவிட முன்னேற்றக் கழகத்தைப்பற்றிப் பேசக்கூடாது என்று பொருளே தவிர, அரசியல் பேசக்கூடாது என்பது பொருள் அல்ல!

திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஈடுபாடுகொண்டுள்ள கலைஞர்கள் மேனுமினுக்கிகளல்ல. ஏதாவது பணம் கிடைத்தால் போதும்—கொட்டைகட்டிக்கொள்ளுகிறோம்—கொடுத்த வேஷத்தை நடிக்கிறோமென்று சொல்லிக் கொண்டிருக்கின்ற கொள்கையைக் கொண்டவர்களல்ல.

மதுரை மாநாட்டிற்குப்புறப்படுகிற தற்கு முதல் தினம் 9-ம் தேதி இரவு எனக்கு டெலிபோன் செய்தி ஒன்று வந்தது—அஞ்சலிதேவி அவர்களாலே நடத்தப்பட்டு வருகின்ற அஞ்சலி பிக்சர்ஸ் என்ற படக்கம்பெனியிலிருந்து—அந்த அம்மையார் போன் செய்தியிலே குறிப்பிட்டார்கள் — என்னுடைய படத்திலே நீங்கள் நடிக்கவேண்டும். நாளையிலிருந்து படப்பிடிப்பிலே நீங்கள் கலந்துகொள்ளவேண்டும். என்பதாக—அதற்கென்ன நடிக்கிறேன்'' —என்றேன். பிறகு, எங்களுடைய மானேசரை அனுப்பி வைக்கிறேன். மற்ற விஷயங்களை அவரிடத்திலே பேசிக்கொள்ளுங்கள் — என்று குறிப்பிட்டு அவரை அனுப்பிவைத்தார்கள் — அவர் என்னிடத்திலே நான்கு மாதங்களுக்குள்ளாக எங்கள் படத்திலே நீங்கள் நடித்து முடிக்கவேண்டுமென்று சொன்னார் — நானும் அதே தாகத்துடனிருக்கிறேன். சில காரணங்களை முன்னிட்டு தேர்தலுக்குள்ளாக மூன்று படங்களில் நடித்துவிட வேண்டுமென்றிருக்கிறேன்—என்று சொன்னேன் — பிறகு நான் நடிக்கவேண்டும் என்று சொல்லுகின்றீர்களே அந்தக் கதை என்ன, எப்படி என்று கேட்டேன்.

ஏதோ வேடிக்கைக்காக — வீரத்துக்காக, விளம்பரத்துக்காக இதை நான் இங்கே குறிப்பிடவில்லை—புகழ்பெற்ற பொதுமாநாட்டிலே நான் பேசிக்கொண்டிருக்கிறேன். பற்பல பத்திரிகை நிருபர்கள் வந்திருக்கிறார்கள்—நாளையதினம் நான் பேசுவது பத்திரிகையிலே வரக்கூடும். அந்த மானேஜர் கதையைப்பற்றி குறிப்பிடும்போது கூறினார் — "பாதி உடம்பு மீனாக அந்த அம்மையார் வருவார்கள். அந்த அம்மையாருக்கு ஏற்பட்டிருக்கிற சாபத்தை நீக்கி, நீங்கள் திருமணம் செய்துகொள்ளுவதாக கதை'' அமைப்பு உள்ளது—என்றார். அவ்வளவுதான் நான் உடனே, "நன்றி ஐயா நல்லது நீங்கள் போய்வாருங்கள் — வணக்கம்'' என்று சொல்லிவிட்டு நான் இங்கே வந்திருக்கிறேன். ஏன் இதைக் குறிப்பிடுகிறேன் என்றால், நாங்கள் கொண்டகொள்கைக்காக வாழுகின்றவர்களே தவிர, மேனுமினுக்கிகள் அல்ல. ஏதாவது போராட்டம் என்றால் நாங்களெல்லாம் பின்வாங்கிச் செல்லுகின்றவர்களல்ல. அண்ணா அவர்கள் ஒரு முறை சொன்னார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கிற எம். ஜி. ஆரைப்பற்றியோ—மற்றவர்களைப்பற்றியோ—எனக்குச் சந்தேகமே கிடையாது — எங்கே அவர்கள் அதிகப்படியாக ஈடுபட்டு தங்களை அவர்கள் மாய்த்துக் கொள்ளுவார்களோ என்கிற பயம் தான் எனக்கு உண்டே தவிர நிச்சயமாக அவர்கள் சந்தேகத்துக்குக் குரியவர்கள் அல்ல என்று குறிப்பிட்டார்கள்.

ஆகவேதான் திராவிட முன்னேற்றக் கழகத்திலே இருக்கின்ற எங்களைப்பார்த்து "நடிகர்கள் அரசியல் பேசக்கூடாது'' என்று சொல்லுகின்றவர்கள் இந்த அளவோடு—இன்றோடு அந்த வார்த்தைகளை—அந்த வாதத்தை முடித்துக்கொள்ள வேண்டும்.

இல்லாவிட்டால். எந்த நேரத்திலும், எந்தச் சமயத்திலும், எந்த மேடையிலும் இந்த விஷயத்தைப் பற்றி வாதாடி முறியடிக்க நாங்கள் தயாராக இருக்கிறோமென்பதை தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்ல திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு இந்த இந்திய உபகண்டத்திலே எந்த இயக்கத்திற்கும் இல்லாத ஆற்றல் — நம்முடைய இயக்கத்திற்கு கிடைத்திருக்கிறது என்கின்ற காரணத்தினாலேதான் — அந்தப் பொறாமையாலேதான் இதுபோன்ற சொத்தை வாதங்களை கிளப்பிக்கொண்டிருக்கிறார்கள்.

சரித்திரப் புகழ்பெற்ற மன்னர்கள் ஆண்ட காலத்திலே யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, விற்படை வேல்படை, என்று படைவரிசைகள் இருந்ததைப்போல இன்றையதினம் நம்முடைய இயக்கத்திலே பற்பல படைவரிசைகள் இருப்பதைப் பார்க்கின்றோம்.

ஒருபுறத்திலே விவசாயப் பெருங்குடி மக்கள் ஆண்ட இனம் நாங்கள் மாண்டு மடிவதோ எங்களுக்கு வாழ்வு தேவை—என்று வண்ணக் கொடி ஏந்தி வருகின்ற அருமையான காட்சியைப் பார்க்கின்றோம்.

மற்றொர் புறத்திலே டாக்டர்கள். உடற்கூறு நிபுணர்கள்தான் நாங்கள் — ஆயினும் உரிமைக்காகப் போரிடவும் தயங்கமாட்டோம்—வடநாட்டாருக்கு அடிமையாக வாழமாட்டோம் என்று குரல் கொடுப்பதைக் காணுகின்றோம்.

இன்னுமொரு பக்கத்திலே வக்கீல்கள் சட்டம் படித்தவர்கள் நாங்கள்—நியாயம் பேசுகிறவர்கள் நாங்கள் நியாயம் பேசி வாதாடத் தெரிந்தவர்கள் நாங்கள் — இந்தக் கட்சியிலே நியாயம் இருக்கிறது, நேர்மை இருக்கிறது — ஆகவே நாங்களும் திராவிட முன்னேற்றக் கழகத்திலே சேர்ந்துவிட்டோம் என்று நாட்டிலே உள்ள நல்ல வக்கீல்கள் பூரிப்போடு கூறுவதைக் காணுகின்றோம்.

இவர்களைப்போலத்தான் மற்றுமோர் பட்டாளம். அது கலைத் துறைப் பட்டாளம். அவர்களது கண்களை உறுத்திக்கொண்டிருக்கிற பட்டாளம்.

இப்படிப்பட்டவர்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து அணிவகுத்து நிற்பதைப் பார்க்கும்போதுதான் மாற்றுக் கட்சிக்காரர்களுக்கு மன எரிச்சல் ஏற்படுகிறது-நம்மைத் தூற்றுவதன் மூலமாக எரிச்சலைத் தணித்துக்கொள்ளுகிறார்கள். திராவிட

(16-ம் பக்கம் பார்க்க)

திராவிடத்துப் பரணி

(கவிதை நூல்)

இராசிபுரம்

திரு. அரங்கசாமி

அவர்களால் ஆக்கப்பெற்றது.

விலை ரூ. 1—00

கிடைக்குமிடம்:—

திருக்குறள் பதிப்பகம்

இராசிபுரம் (P. O.)

சேலம்.

இந்திய ஒருமைப்பாடு--ஒரு கட்டுக்கதை!

"இந்தியா என்று அழைக்கப்படுகிற ஆட்சியின் அமைப்பு ஆங்கிலேயர் ஆட்சிக்குமுன் இருந்ததில்லை. வெளிநாட்டு ஆதிபத்தியத்தின் திணிப்பே இந்தியா என்ற அமைப்பை ஏற்படுத்தியது.''

"இந்தியாவிலுள்ள மக்களின் கலாசார அமைப்பு, தொன்றுதொட்டு அமைந்தது அல்ல என்பதால் "இந்தியன்'' என்ற புதிய இனத்தை ஏற்படுத்துவது இயலாததொன்றாக உளது''

"அகில இந்தியா' என்ற எண்ணம் ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில், படித்த வகுப்பினர் உண்டாக்கியதே. இந்திய உபகண்டம் ஒரே ஏகாதிபத்தியக் குடியேற்ற ஆட்சியின்கீழ் அமைந்தது ஒரு 'விபத்தே' யாகும்.''

"மக்களின் பக்தியும் பற்றும் இந்தியாவின்பால் ஒருபோதும் இருந்ததில்லை. அது அவரவர்களின் கிராமங்கள், இனம், பிரதேசம் இவைகளின்மீதே இருந்துவருகிறது''

"ஆங்கிலேயர் மட்டும் இந்த உபகண்டத்திலுள்ள அரசுகளை வெல்லாமலிருந்தால் — ஒரே ஆட்சியினுள் ஆட்படுத்தப்படாமலிருந்தால், இந்த உபகண்டத்தில் மொழிவழி அமைந்த பல சிறு நாடுகள் இயங்கி இருக்கும்''

"இந்திய அடிப்படைக் கலாசாரம் என்பது ஒரு கட்டுக்கதையே!''

திரு. டி. டி. கார்வே என்பார் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஏட்டில் 'தேசீய ஒருமைப்பாடு' என்ற தலைப்பில் எழுதும்போது மேற்கண்டவாறு குறிப்பிடுகிறார். அதே ஏடு திரு. கார்வேயின் கருத்தை ஆதரித்து ஒரு தலையங்கமும் தீட்டியுளது. அதில்,

"இந்தியா என்று நாம் அழைக்கும் ஒரு துணைக்கண்டம் ஆங்கிலேயர் அத்துணைக்கண்டத்திலுள்ள பல நாடுகளை பெற்றதினால் ஏற்பட்ட ஒரு அமைப்பே. அவர்களின் வெற்றியின் பிறப்பாக அத்துணைக்கண்டத்திலுள்ள பல்வேறு நாட்டு மக்களை ஒரே எதேச்சாதிகார ஆட்சியின் கீழ் உட்படுத்தியது. இது ஏறக்குறைய ஐரோப்பியக் கண்டத்தினுள் உள்ள பல்வேறு நாடுகளை ஒரே ஆட்சியின்கீழ் உட்படுத்துவது போலாகும். இந்திய அடிப்படை ஒற்றுமை என்பது ஒரு கட்டுக்கதையாகும். அந்தக் கட்டுக்கதையை உடைக்கும் காலம் அருகில் வந்துவிட்டது'' என்று குறிப்பிட்டுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம் வெகுநாட்களாகக் கூறிவந்துள்ள ஒரு கருத்தை — "இந்தியா ஒரு நாடல்ல — உபகண்டம்'' என்ற கருத்து, எதிர்பாராதவிதமாக எதிர்பாராத முகாமிலிருந்து ஆதரிக்கப்படுகிறது என்றால் 'ஏக இந்தியா' பித்தர்கள் திடுக்கிடத்தான் செய்வர். இது இயற்கை. 'டைம்ஸ் ஆப் இந்தியா' உலகில் சிறந்த நாளிதழ்களில் ஒன்றாகும். "தேசீய ஒருமைப்பாடு'' குறித்து எழுதிய திரு. கார்வே

ஏவி. எம். ஜாபர்

அவர்களும் சிறந்த வரலாற்று ஆசிரியர்களுள் ஒருவராவார்.

இந்தியாவின் தலைசிறந்த எழுத்தாளர் என்று போற்றப்படும் திரு. கே. ஏ. அப்பாசு அவர்களை திரு. கார்வேயின் கட்டுரை வெகுண்டெழச் செய்துவிட்டது. ஏக இந்தியக் கூடாரத்தினுள் அமர்ந்துகொண்டு, கார்வேயின் கட்டுரைக்கு மறுப்புரை ஒன்று 'பிளிட்ஸ்' வார ஏட்டின் கடைசிப் பக்கத்தில் எழுதியுள்ளார். கார்வேயின் கட்டுரையையும், 'டைம்ஸ் ஆப் இந்தியா'வின் தலையங்கத்தையும் சாடும் அவர், அடிப்படைக் காரணத்திற்கு விளக்கத்துடன் மறுப்புத் தராமல், வழுக்கி விழுந்துவிட்டார். சர் வின்ஸ்டன் சர்ச்சிலுடன், கார்வேயை ஒப்பிட்டு, முன்னவர் தாங்கள் ஆண்டதற்கு காரணம் காட்டவே, அவ்வாறு இந்தியா ஒரு உபகண்டம் என்று கூறியதாகவும், திரு. கார்வே என்ன காரணத்திற்காக அவ்வாறு சர்ச்சிலாக மாறுகிறார் என்று கேட்டுப் பொருமுகிறார். ஹியூன்சாங் பாஹியன் போன்ற சீன யாத்திரிகர்கள் குறிப்பிட்டதையும், அசோகனின் ஆட்சிக் காலத்தில் 'பாரதவர்ஷ' என்றிருந்ததையும் முன்னாள் ஆட்சியியலிலும் இந்திய ஒருமைப்பாடு காணப்படுவதாகவும்கூறிச் 'சப்பை' கட்டுகிறார். ஏக இந்தியாவிற்கு வக்காலத்து வாங்கிப் பேசுமிடத்து,

"அசோக சாம்ராஜ்யத்தின் பரப்பு இந்நாளைய இந்தியாவின் பரப்பளவிற்குக் குறைந்ததல்ல. தெற்கு மட்டும் அசோகனின் ஆட்சியில் இல்லாவிடினும், அதற்குப் பதில் இந்நாளைய ஆப்கானிஸ்தானம் அசோகனின் ஆட்சியின்கீழ் இருந்தது'' என்று கூறி வழுக்கிவிழுந்துவிடுகிறார். இந்திய ஒருமைப்பாட்டைக் காக்க முயன்று, திராவிடக் கூட்டாட்சி ஏற்பட வழி வகுக்கிறார்— தெற்கு மட்டும் அசோகனின் ஆட்சியில் இல்லை. அந்த அளவிற்காவது ஒரு கசப்பான உண்மையை ஒப்புக்கொண்டதற்கு திரு. அப்பாசு பாராட்டிற்குரியவர்.

சங்கராச்சாரியார் சமயத் துறையின் வழியாக பூகோள ரீதியான ஒருமைப்பாட்டைக் காண விழைந்ததையும் திரு. அப்பாசு அவர்கள் குறிப்பிடுகையில்,

தெற்கில் சிருங்கேரியையும், கிழக்கில் பூரியையும், மேற்கில் துவாரகையையும் வடக்கில் இமயத்தின் மத்தியில் பத்ரிநாத்தையும் சுட்டிக்காட்டி, இதன்மூலம் இந்திய ஒற்றுமையைக் காண விழைந்தார். சங்கராச்சாரியார் தென்னிந்தியர் என்று கூறுகிறார். அப்படியாயின், ஒரு சமயம் வெவ்வேறு நாடுகளில் பரவினால், அதனால் அவையாவும் ஒரேநாடாகுமா? கிருத்துவர்களின் புனித இடங்கள் பாலத்தீனிலும், தமிழகத்தில் வேளாங்கண்ணியிலும் இருப்பதால் அவையிரண்டும் ஒரு நாடாகுமா?

மெக்காவும், அஜ்மீரும், பக்தாதும் வெவ்வேறு நாடுகளிலிருந்தாலும் அவை ஒரு சமயத்தவரின் புண்ணிய இடங்கள் என்பதால், அவை யாவும் ஒரே நாடாகிவிடமுடியுமா? இதுதவிர, இந்திய ஒருமைப்பாட்டை வலியுறுத்த சோவியத் யூனியனையும், செக்கோஸ்லேவாகியாவையும் எடுத்துக்காட்டாகக் கூறுவது விந்தையாக உளது. இந்தியாவிற்கும் மேற்கூறிய இருநாடுகளுக்கும் இருக்கும் வேறுபாடுகளை நம்மை விடக் 'காம்ரேடு' அப்பாஸ் நன்கு உணர்ந்தவர். நாம் சொல்லத் தேவையில்லை. செத்தபாம்பிற்கு உயிரூட்டம் செய்யும் முயற்சியும் இந்திய ஒருமைப்பாட்டைக் காக்கச் செய்யும் முயற்சியும் ஒன்றே.

நம்மிடம் உறவுகொண்டிருந்த ஒருவர் இந்தியா ஒரு நாடு அல்ல என்று நமக்காகப் பாராளுமன்றத்திலே வாதிட்டார். வாழ்த்தினோம். 'தென்னகத்தாருக்குத்தான் இக் கெடுமதி' எனத் தூற்றினர் வடபுலத்தார் — நம்மை ஆளவந்தார். ஆனால், நமக்காக வாதிட்டவர் 'மனம்மாறி' 'வடக்கு நரகலோகமும் அல்ல—வடக்கிலிருப்பவர் எமகிங்கரரும் அல்ல' என்னும் தனது புதியகட்சி மொழிவழியில் இந்திய தேசிய ஒருமைப்பாட்டைக் காக்கும் என்றுரைத்தபோது, வடவர் மகிழ்ந்தனர். அவரை வாழ்த்தினர். மகிழ்ச்சி மறையும் முன்னே இதோ திரு. கார்வேயும், டைம்ஸ் ஆப் இந்தியாவும் மறைக்கப்பட்ட உண்மையை – கட்டுக்கதையைச் சாடி, நமது இயக்கத்தின் கருத்தை வலியுறுத்தினால்......! வடவர்களிடமிருந்தே இந்தவிதமான கருத்தை ஆளவந்தாரும் அவருடைய கட்சியும், அதனை வழிமொழியும் ஏகத்துவக் கட்சிகளும் எதிர்பார்த்திருக்க மாட்டார்கள்.

நமது வேலையை இலகுவாக்கி நமக்காக ஓரளவு வாதிட முன்வந்திருக்கும் திரு. கார்வேயையும், டைம்ஸ் ஆப் இந்தியாவையும் பாராட்டுகிறோம்.

★

மதனபுரி இளவரசியின் எழில்பற்றி உலகெங்கணும் மகத்தான பேச்சு. அவளின் அழகுக்கு அகிலம் அனைத்தையுமே ஈடு காட்டினாலும் கட்டிவராது என்றனர் கண்டவர்கள். எழில் எப்படி அவள் ஆவாள் என்றால்; எழில் என்ற சொல்லுக்கான மொத்த உருவாக அவளைக்கொண்ட காரணத்தினால் எழிலையும் அவளையும் பிரித்தறிய முடியாமல் அவளையே எழில் என்றனர். அவளே எழில் ஆனாள்.

வீரர்கள் மௌனமாக மனதிற்குள், 'இளவரசி', எம்மை ஆள முடிசூடி வருவதற்கு முன்னால், எங்கள் இதயத்தை ஆண்டுவிட்டேன், இந்த அகில முழுமையுமே வென்று அதற்கான காணிக்கை கொண்டுவந்து கொடுக்கிறோம்' என்றனர்.

கவிஞர்கள் இளவரசியின் அழகை இதயத்திலே தேக்கி; கற்பனையில் காவிய மங்கையைப் படைப்பதைப் போல், 'புலவர்கள் நாங்கள் இது காறும் ஏதேதோ கற்பனையில், கனவில் புலம்பித் தீர்த்தாலும், இனி எங்கட்கு தேடற்கரிய கருவூலமாகி யிருக்கிறாய், கொள்ளக் கொள்ளக் குறையாத கருத்துக்கள் ஊறும் உள்ளம் எங்கள் உள்ளமென ஆக்கிவிட்டாய். அழகே! உன் அசைவு எங்கள் பாக்களுக்கு எடுப்பு; உன் குழைவு எங்கள் பாவினங்களுக்குத் தொடுப்பு; உன் நடையோ முடிப்புக் கட்டாத காவியம். மற்றவை, மற்றவை...என்ன சொல்ல...எங்கள் நெஞ்சம் நெடு மூச்செறிகிறது......போ......!! என்றனர்.

இளைஞர்கள், 'இளவரசியின் பார்வை பட்டாலே போதும்; அதிலே கோபம் கொப்பளித்தாலும் கொடுமை தத்தளித்தாலும், தங்கள் உள்ளம் இன்ப ஊற்றுப் பெற்று விடும்' என்றனர்.

இப்படிப் பலப்பலர் இளவரசியின் எழில்பற்றி எங்கணும் பேசிக் கிடந்தனர். இளவரசிக்கே இப்பேச்சுகள் எட்டிற்று, பார்வைகள் பட்டுப்பட்டுத் தெறித்தன. முதலில் முந்தானையால் முகத்தை மூடினாள். போகப் போக நீண்ட நேரம் கண்ணாடியின் முன்னே நின்று நெடுந்தவம் புரிந்தாள்.

பின்னர்...இளவரசி கட்டளையிட்டாள். ஆணை பிறந்தது. அவளின் இதயத்திலே குடியேறிய எண்ணத்திற்கு இதம் தந்தாள்.

'என்னழகை நான் கண்டு கண்டு களிக்க முடியாமல், பிறர் கண்டு கண்டு களித்துக் கூறுவதா? என்ன கொடுமை? அதற்கு வழி? அது தான் ஆணை. தான் சொல்லும் இடம், நிற்கும் இடம், இருக்கும் இடம், குளிக்கும் இடம், உறங்கும் இடம் எனத் தன் நிழல் தன்னைத் தொடரும் இடம் எல்லாம் இரசம் பூசப்பட்ட கண்ணாடிகளைப் பதித்தாள். அவளின் மனம் இன்பத்தால் நிறைந்தது. எங்கு திரும்பினும் அவளின் எழிலே எழில் செய்தது. முன்பைவிட இப்போது அவள் சற்று அதிகமாகவே ஆடினாள், ஓடினாள், உட்கார்ந்தாள், விளையாடினாள்.

தன் தோழிகளைக் கூவியழைத்தாள், 'பாருங்களடி என் வேலையை, பிறர் மட்டும் பருகிக்கொண்டிருந்த என் அழகை நானும் பருகத் தொடங்கிவிட்டேன். எப்படி என் வேலை என்றாள்.'

தோழிகள், 'ஆமாம் இளவரசி ஆமாம், உங்கட்கு அழகுமட்டுமல்ல, அதற்கேற்ற அறிவும் இருக்கிறது. இந்நிலை யாருக்கும் அமையாத ஒன்று—நீங்களோ இரண்டும் அமையத் தப்பிப் பிறந்தீர்கள். இவைகள் யாவும் உங்கள் சாயல்தான்' என்றனர் கண்ணாடியில் காணும் உருவங்களைக் காட்டி.

'சாயலா...? இல்லை... இல்லை... நானேதான் அவைகள்...... அவைகளேதான் நான்... எதிலே அவைகட்கும் எனக்கும் வேற்றுமை? நான் தூக்கத் தூக்கி, ஆட ஆடி, பேசப் பேசி, நான் செய்வனவே செய்யும் அவைகளும் நானும் ஒன்றுதான்' என்றாள்.

தோழிகள் 'ஆமாம்... ஆமாம்...' என்றனர்.

அரண்மனை, கண்ணாடி அரண்மனை எனப் பெயர்பெற்றது. இளவரசி கண்ணாடியழகியானாள்.

திடீரென்று ஒருநாள் இளவரசி படுத்த படுக்கையாகி விட்டாள். யாருமே எதிர்பார்க்கவில்லை இதை. அரண்மனைமருத்துவருக்கே புரியாத நோயாகிவிட்டது இது. சுரம் விநாடிக்கு விநாடி, கணத்துக்குக் கணம் ஆடியாடி ஓடிவரும் புதுவெள்ளம்போல் ஏறிக்கொண்டே போயிற்று.

ஒன்று... இரண்டு... மூன்று...... இளவரசி எழவே இல்லை. நான்காவது நாள் இளவரசிக்கு அம்மை நோயென்று அறிவிக்கப்பட்டது. நாடு, நகர், ஊர், உலகம் எங்குமே இளவரசியின் நோய்பற்றிப் பேசப்பட்டது. பிரார்த்தனைகூடச் செய்யப்பட்டது.

அரண்மனையின் கலகலப்பு அடங்கிவிட்டது. எங்கும் அமைதி, அமைதி. மௌன ஊர்வலத்திலே உலா வந்தனர் யாவரும். எழில் துன்பப்படும் பொழுது யாருக்குத்தான் சிரிக்கத்தோன்றும். கண்ணீர்த் திவலைகள் உருண்டு ஓடி வீழ்ந்து பலரின் நெஞ்சச் சூட்டைத் தணிக்க முயற்சித்தன.

இளவரசி எழுந்தாள். நோய் விடைகொண்டது என்றனர் மருத்துவர்கள். தலைக்கு நீர் ஊற்ற எல்லா ஏற்பாடுகளும் செய்தார்கள். மெல்ல அழைத்து வந்து வெதுநீராட்ட அவளை அமர்த்தினர் சேடிகள். ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டனர். மெல்லப் பேசினர். பின்னர் அரண்மனை முழுமையுமே "இரகசியம், இரகசியம்" என்றவாறே பரம இரகசியம் ஆயிற்று அப்பேச்சு. ஆனால், இளவரசியிடம் எவரும் வாயெடுக்கவே இல்லை.

நீராட்டி முடிந்த பிறகு கூந்தலை உலர்த்தி மெல்ல அழைத்துச் சென்று பஞ்சணையில் அமர்த்தினர். அமர்ந்த இளவரசி, தோழி ஒருத்தியைப் பார்த்து, 'எங்கே அந்தக் கண்ணாடியின் திரையை அகற்று' என்று தன்முன்னே இருந்த கண்ணாடி ஒன்றின் திரையை நீக்கச் சொன்னாள்.

தோழியே தீண்டத்தகாத ஒன்றைத் தீண்டச் சொல்வதைப்போல் திகைத்தாள். அவளின் திகைப்பு இளவரசிக்கு வியப்பைத்தந்தது. 'என்ன...? ஏன்...?' என்றாள்.

அதற்குள் உயிர்த்தோழி ஒருத்தி, 'இன்றுதான் தலைக்குவிட்டிருக்கிறது, இன்னும் சில நாட்களுக்குக் கண்ணாடியை நீங்கள் பார்க்கவே கூடாது' என்றாள்.

'ஏன் அப்படி...?'

'உடம்புக்கு ஆகாது'

'என்ன அப்படி ஆகாது?'

விடையே வினவானால், விடையேது? பதிலில்லை. தோழியை நோக்கினாள். அவள் மற்றவர்களைச் சைகையால் வெளியேறச்செய்து கொண்டிருந்தாள்.

இளவரசியின் எண்ணம் எங்கேயோ ஓடிற்று, ஏதோ சதிநடக்கிறது...! எதையும் எதிர்பாராதவளாய் எழுந்து எதிரே ஓடி கண்ணாடி ஒன்றின் திரையை நீக்கிப் பார்த்தாள். தன் எதிரே...! 'ஆ...கா...' உலகமே ஒரு சுற்றுச் சுற்றிவிட்டது. அப்படியே விழுந்துவிட்டாள். தோழி வாரியெடுத்து 'அதற்குத்தான் இப்பொழுது பார்க்கவேண்டாம் என்றேன்' என்றாள்.

"போடி, எப்பொழுது பார்த்தால் என்ன? கண்ணாடிக்குள் தெரிபவள் நான்தானே?"

தோழியிடம் பதில் இல்லை.

மீண்டும் எழுந்து சென்று நன்றாக உற்றுப் பார்த்தாள். "ஐயோ...! என்ன கோரம்! என்ன கொடுமை! பூவுலகே புகழ்ந்த பேரழகியா நான்? இல்லை... இல்லை... கண்ணாடிக்குள் நான் இல்லை... இந்தக் கண்ணாடி மாயக் கண்ணாடி...இதற்குள் ஏதோ மாயை இருக்கிறது.

'இல்லை இளவரசி...'

'நான் நம்ப முடியாது...' என்றவாறே மற்றொரு கண்ணாடியிடம் சென்று அதன் திரையை நீக்கிப் பார்த்தாள். அதிலும் அவ்வாறே! மற்றொன்றிடம்... அதுவும் அவ்வாறே! மற்றொன்று, மற்றொன்று... அதே... அதே...!

என்றாலும், தன் உருவத்தின் பிரதிதான் அவைகள் என்று அவளால் நம்ப முடியவில்லை. "ஏதோ சூழ்ச்சி செய்துவிட்டீர்கள்! மாயம் செய்துவிட்டீர்கள்! மாயை! மாயை! எல்லாம் மாயை! இனி நான் இங்கிருக்க மாட்டேன்!" என்று கத்திக் கொண்டே ஓடினாள்.

தோழி தொடர்ந்தாள் "இளவரசி! இளவரசி! எங்கே போகிறீர்கள்?"

"நான் மாயையற்ற உலகுக்குப் போகிறேன்"

"இல்லை இளவரசி, அந்த உருவங்கள் யாவும் உங்கள் சாயல்தான்"

"சாயல் இல்லை... மாயை...... மாயை..." மீண்டும், மீண்டும் கத்தினாள் இளவரசி. கத்தியபடியே அரண்மனையைவிட்டு வெளியேறி ஓடினாள். தோழி என்ன செய்வாள் அரசரிடம் ஓடுவதைத் தவிர.

தென்னகம் புறக்கணிக்கப்படுகிறது

தென்னகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள திட்டத்தின் தொகை, அதன் தேவைக்கும் வளர்ச்சிக்கும் ஒத்ததாக இல்லை.

தென்னகத்திற்குப் பெருந் தொகையை மத்தியஅரசு செலவிட வேண்டியது இன்றியமையாதது மட்டுமல்ல — நியாயமானதும் ஆகும்.

பலவகையான வளர்ச்சிக்கட்டத்திலுள்ள மாநில ஆட்சி அமைப்புகளைக் கொண்டுள்ள ஒரு இணைப்பில், வளர்ச்சியின் முழுச்சுமை, தொழில் துறையில் முன்னேறியுள்ள மாநில ஆட்சி அமைப்புகள் மீதே சுமரும்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் உள்ள வெறும் வழக்கு அல்ல இது; முழு நாட்டின் நலத்தையும் பாதிக்கின்ற பெரும் பிரச்சினையாகும்.

மற்ற இந்தியப் பகுதியிலிருந்து, தென்னிந்தியா தெளிவாகப் பிரிந்து காட்சியளிக்கிறது. அதில் இடம் பெற்றுள்ள நான்கு மொழிப்பிரிவுகளிடை இன்னும்கூடச் சிறப்பான ஒருமைப்பாடு இருந்துவருகிறது. உண்மையான சத்துள்ள நலன்கள் அவைகளை ஒன்றுகப் பிணைத்துள்ளன.

நிர்வாகக்கோட்டுபாடுகளை, அதிலும் குறிப்பாகப், பொருளாதார நடைமுறைகளை உருவாக்குவதிலும் செயலாற்றுவதிலும், தென்னிந்திய மாநில ஆட்சி அமைப்புகளுக்குள்ளாக இருந்துவரும் உறவுமுறையை ஒரு பொருட்டாகக்கொள்ளவேண்டும். எனவே, இப்பகுதியில் ஒரு பெரும் பரப்பு, தனி மண்டலமாக உருவாக்கப்பட்டு, அதற்கு ஒரு மண்டலக் குழுவும் அமைக்கப்பட்டிருக்கிறது. இம்மண்டல ஏற்பாட்டில், மைசூர் ஆட்சி அமைப்பும், இருந்து தீரவேண்டியபடி, இணைக்கப்பட வேண்டும்.

அனைத்து இந்திய மட்டத்தில் தொழில் வளர்ச்சிக்கான திட்டம் தீட்டப்பட்டு வருவதற்குப் பதிலாக, மண்டல மட்டத்தில் திட்டம் தீட்டப்படவேண்டும்.

அதுவுமன்றி, மாநில ஆட்சி அமைப்பு மட்டத்தில், ஒவ்வொரு மாநிலத்தின் உற்பத்தியையும், தனி நபர்களின்வருமானத்தையும் கணக்கிடவேண்டும்.

இத்துறையில் தென்னாட்டு மக்களுக்குக் கடமை உண்டு. அரசியல் தொடர்பற்றவர்கள் ஒன்றுபட்டு இதற்கெனச் சங்கம் காணவேண்டும்.

நதிகளையும், இயற்கை வளங்களையும் அதிலும் குறிப்பாக மின்சார உற்பத்திச் சாதனங்களையும், உணவுப் பொருள்களையும் தனக்குள் பொதுப்படையாகப் பயன்படுத்துவதில் கருத்துச் செலுத்தத் தென் மண்டலக் குழு முன்வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும்.

அதுமட்டுமன்றித், திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட இருக்கும் தொழில் வளர்ச்சித் திட்டங்களில், 'மிகுதியான மக்கள் தொகை நிறைந்தும், பொருளாதாரத்துறையில் தேய்ந்தும் கிடக்கும் இப்பகுதிக்கு உரிய பங்கினைப் பெறுவதிலும், இம் மண்டலத்தில் இடம் பெற்றுள்ள ஆட்சி அமைப்புகளுக்கிடை ஒத்துழைப்பு இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

டாக்டர் தாமஸ் கருத்து

உயர்ந்தபட்ச நலனை நாடு பெறவேண்டும் என்பதுதான் 'நமது பெடரல் யூனியன்' அரசின் குறிக்கோளாக இருக்குமானல், கூட்டுறவு அடிப்படை இலட்சியமான 'சக்திக்கேற்ற உழைப்பு — தேவைக்கேற்ற வசதி' என்ற தத்துவம் மேற்கொள்ளப்படவேண்டும்.

தொழில் துறையில் முன்னேறி இருக்கின்ற மாநில ஆட்சி அமைப்புகளிடமிருந்து மிகுதியாகப் பணந் திரட்டி, அதிகமான மக்கள் தொகையைக்கொண்டுள்ளதும், தொழில் துறையில்குறைந்துள்ளதுமான பகுதிகளின் முன்னேற்றத்திற்குப் பெருந்தொகை செலவிட வேண்டும்.

பல்வகையான வளர்ச்சிக் கட்டத்திலுள்ள பல மாநில ஆட்சி அமைப்புகளைக் கொண்டுள்ள இணைப்பாக இந்தியா இருக்கின்றது. எனவே, தொழில் வளர்ச்சியின் சுமை முழுதும், தொழில் வளம் மிகுதியும் பெருகியுள்ள மாநிலங்கள்மீதே சுமரும்.

ஒவ்வொரு பகுதியின் தேவைகளுக்கேற்ப மண்டல மட்டத்தில் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும். ஆனல், துரதிருஷ்டவசமாக இந்தியப் பேரசு, தேசம் முழுதுக்கும் தொழில் திட்டம் தீட்டி இருக்கிறது.

திட்டமிட்ட பொருளாதாரம், பெருந்தொகை முதலீட்டை உள்ளடக்கிக்கொண்டிருக்கின்றது. பெருந்தொகை முதலீட்டின் விளைவாக மக்களிடை மிகுதியான பணம் கிடைக்க வழி ஏற்படுகிறது. அதாவது, மொத்தவருமானம் உயர்கிறது என்பதும், எந்தப்பகுதியில் அதற்கு முதலீடு செய்யப்பட்டுள்ளதோ, அந்தப் பகுதியின் வாங்கும் சக்தி கூடுகிறது என்பதுமே இதற்குப் பொருளாகும்.

குறிப்பிட்ட ஒருபகுதியின் மிகுவருமானப் பெருக்கமானது, மற்றப் பகுதிகளுக்குக் கேடான விளைவையே கொடுக்கும். இந்தியாவில் காணப்படும் தற்காலப்பொருள்விலை ஏற்றத்திற்கும், உணவுப் பிரச்சினை பயங்கர நிலையை அடைந்திருப்பதற்கும் இப்போக்குப் பெரிதும் காரணமாகும் என்று நான் (தாமஸ்) கருதுகிறேன்.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழும், பாதுகாப்பு (இராணுவம்) திட்டத்தின்கீழும், இந்தியப் பேரரசின் வருமானத்தில் பெரும் பகுதி வடநாட்டு மாநிலங்களிலேயே செலவிடப்பட்டு வருவதும் பொருள் விலை ஏற்றத்திற்குரிய மூலகாரணமாகும்.

யூனியன் பகுதிகளுக்குள்ளாகப் பரவலாகச் செலவிட இந்தியப் பேரரசு முன்வந்து இருக்குமானல், பற்றுக்குறைத் திட்டத்தின், செலவுத் தொகையை மேலும் கூடுதலாக்கினுலும்கூடப், பொருள் விலை ஏற்றத்திற்கு இடமிருந்திருக்காது.

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழும் இராணுவச் செலவின் கீழும், இந்தியப் பேரரசின் வருமானத்தில் பெரும்பகுதி சில வடநாட்டு மாநிலங்களில் செலவிடப்பட்டிருக்கிறது. இதுவே, பொருள் விலை ஏற்றத்திற்கான மூலகாரணமாகும்.

வடக்கு மாநிலங்களில் அதிகமாகப் பணம் குவித்திருக்கின்றது. அதன் பலனுக, உணவு தானியங்களுக்கும், இன்றியமையாப் பயன்படு பொருட்களுக்கும் அங்கு மிகுதியான தேவை இருக்கிறது. அம்மிகுதித்தேவை மேற்படி பொருட்களின் விலையை உயர்த்திவிட்டது. அவ்விலையேற்றம் வடநாட்டுடன் நின்றுவிடவில்லை; அனைத்து இந்தியாவிலும் அவ்விலை ஏற்றம் பரவிக் கிடக்கிறது.

O

'செய்தி கிடைத்தது'

—(வேலை—மாலவன்)—

ஆளை வேகலைக்காவிட்டாலும் கூட, வியர்வையைக் கொட்டவைத்துக்கொண்டிருந்தது வெயில்.

அதையெல்லாம் பொருட்படுத்தாமல் ஊரைச் சுற்றிக்கொண்டிருந்தான், நிருபர் நிலவொளி நேசன்.

நடந்து சுற்றினான் — சைக்கிளை எடுத்துக்கொண்டு சுற்றினான். என்ன சுற்றி என்ன பயன்? ஒரு செய்தியாவதுகிடைக்கவேண்டுமே?

இன்று மட்டுமா? இதேபோல் நாலைந்து நாட்களாக, அவன் நிருபராக வேலை பார்க்கும் 'எதிரொலி'க்கு ஒரு செய்திகூட அவனால் அனுப்ப முடியவில்லை. இது அவனுக்கு மிகுந்த வருத்தமாக அவமானமாகக் கூட இருந்தது. தன்னைப்பற்றி அந்த 'எதிரொலி' பத்திரிகை ஆசிரியர் என்ன நினைத்துக்கொள்வாரோ என்ற திகில் ஒருபுறமும், செய்திகள் அதிகமாக அனுப்பாவிட்டால் சம்பளத்தைக் குறைத்து அனுப்புவார்களே என்ற கவலை ஒரு புறமும் சேர்ந்து, இன்று எப்படியாவது ஒரு செய்தியாவது தேடிப்பிடித்துக் கொண்டுதான் வருவது என்ற முடிவிற்குக் கொண்டுவந்து நிறுத்தியிருந்தது அவனை.

அவனும் அந்த முடிவோடுதான் காலையில் வீட்டிலிருந்து கிளம்பியிருந்தான். ஆனால், இதுவரை எந்த ஒரு செய்தியும் கிடைக்கவில்லை. அவனும் எங்கெங்கோ சுற்றினான்.

இரயில் நிலையத்திற்குச் சென்றான் —பஸ் நிற்குமிடத்திற்குச் சென்றான் —ஆற்றங்கரைக்குச் சென்றான்— காவலர் நிலையத்திற்குச் சென்றான்— கோவிலுக்கு—கிணற்றடிக்கு—இன்னும் எங்கெங்கே கூட்டம் கூட வாய்ப்பிருக்கிறதோ, அங்கெல்லாம் சென்றான். ஆனாலும், என்ன பயன்? ஒரு செய்திகூடக் கிடைக்கவில்லை. எனவே ஊரின்மீது ஒரே கோபம் கோபமாக வந்தது.

அடச்சே! என்ன ஊர்? இத்தனை கூரை வீடுகள், கீற்றுக்கொட்டகைகள் இருந்தும் என்ன பலன்? ஒரு சிறு தீ விபத்து? ஊம்... அட அதுதான் போகட்டும், இவ்வளவு பெரிய காவேரி ஆறு ஓடியென்ன? அதில் வெள்ளம் வந்துதான் என்ன? எவனாவது நீச்சல் தெரியாத பயல் விழுந்து தொலைத்தானா? சரி போகட்டும், எவனாவது எவளையாவது இழுத்துக் கொண்டாவது போய்த் தொலைத்தானா? வேண்டாமய்யா; ஏதாவது கொலை கொள்ளை, அடிதடி வம்பு வழக்கு இப்படியாவது நடந்து தொலைத்ததா? ஊம்... மூச்...! மகா மகா மோசமான ஊராயிருக்கே என்று திட்டித் தன் அலுப்பை வெளியிட்டுக்கொண்ட நிருபர் நிலவொளிநேசனுக்கு, அருகில் இருந்த டீக்கடையைக் கண்டதும், ஒரு டீயாவது குடிக்க வேண்டும் போலிருந்தது. உடனே உள்ளே சென்று ஒரு டீயைக் குடித்துவிட்டு வந்தான்.

டீயைக் குடித்துவிட்டு வந்ததும் மூளை சற்றுத் தீவிரமாகச் சிந்திக்க ஆரம்பித்தது.

ஊர் இருக்கிற நிலையைப் பார்த்தால், இன்னும் ஒரு வாரத்திற்குச் செய்தி கிடைக்காதுபோல் இருக்கிறதே! இப்படியே போய்க்கொண்டிருந்தால், தன் நிலை என்ன ஆகும் என்ற நினைவு வந்தவுடன் இன்று எப்படியும் செய்தி அனுப்பியே ஆக வேண்டும்; அதற்கு என்ன வழி? என்ற யோசனையில் ஆழ்ந்தான். அப்பொழுது திடீரென்று ஒரு யோசனை உதயமாயிற்று. உடனே, ஆம்! அதுதான் சரி என்ற முடிவிற்கு வந்தான்.

உடனே பேனாவை எடுத்தான், பேப்பரை எடுத்தான், அவசர அவசரமாக எழுதத் துவங்கினான்.

அது, ஒரு மிரட்டல் கடிதம். அதுவும் பயங்கரமான மிரட்டல் கடிதம். எழுதி முடிந்ததும் மறந்தும் கூடக் கையெழுத்துப் போட்டுவிடாமல், கவரில்போட்டு உள்ளூர்ப் பிரமுகர் ஒருவருக்கு உள்ளூர் அஞ்சலில், அதுவும் துரித அஞ்சலில் போட்டுவிட்டுச் சற்று நிம்மதி அடைந்தவனாக வீடு திரும்பினான்.

அவன் வீடுதிரும்பிய சுமார் ஒரு மணி நேரத்திற்குப்பின் ஒரு ஆள் வந்து, 'பிரமுகர் ஒருவர் கூட்டிக் கொண்டு வரச்சொன்னதாகச் சொன்னான். உடனே துள்ளிக் குதித்துக்கொண்டு கிளம்பினான் நிலவொளிநேசன், ஏதாவது செய்தி கிடைத்தேதீரும் என்ற நம்பிக்கையில். அவன் நம்பிக்கை வீண்போகவில்லை. அந்தப் பிரமுகர் இவனுக்காகவே காத்திருந்தார். இவனைக் கண்டதும், "வாங்க, வாங்க இதைப் பார்த்திங்களா? எந்தக் காலிப்பயலோ இந்த மிரட்டல் கடிதத்தை எழுதியிருக்கான். இதற்கெல்லாம் நான் பயந்துவிடுவேனா என்ன? இருந்தாலும் போலீஸிலும் புகார்செய்திருக்கிறேன்; நீங்களும் உங்கபேப்பரில் போட்டுவையுங்க" என்று சொல்லிக்கொண்டே அந்த மிரட்டல் கடிதத்தை — செய்தி ஒன்றும் கிடைக்கவில்லையே என்பதற்காக நிலவொளிநேசன், தானே எழுதிப்போட்ட அந்தக் கடிதத்தை வாங்கிக்கொண்டு, அதோடு அந்தப் பிரமுகரின் புகைப்படம் ஒன்றையும் வாங்கிக்கொண்டு செய்திகிடைத்த மகிழ்ச்சியோடு புறப்பட்டான் நிருபர் நிலவொளிநேசன்.

★

'பணம் இல்லை' என்பது பரிகாரமாகாது

ஐந்தாண்டுத் திட்டங்களின் பெயரால் வடநாட்டில் பலகோடி ரூபாய் முதலீடு செய்து பக்ரா-நங்கல், தாமோதர் போன்ற பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களை நிறைவேற்றி இருக்கும் மத்திய அரசு, தெற்கே மைசூர் —ஆந்திர மக்களுக்கு நற்பயனளிக்கக் கூடிய துங்கபத்திராத் திட்டத்தைத் திண்டாடவிட்டிருப்பதைக் கண்டித்தும், இந்தியப் பேரரசு தென்மாநிலங்களுக்கு இழைத்துவரும் அநீதியையும், கடைப்பிடித்துவரும் தவறான கொள்கையையும் வெளிப்படுத்தும் முறையிலும், பெங்களூரிலிருந்து வெளிவரும் ஆங்கிலத் தினஇதழான 'டெக்கான் ஹெரால்டு' தீட்டியுள்ள தலையங்கத்தை மொழிபெயர்த்து இங்கு தந்துள்ளோம்; அவ்விதழ், நமது கட்சி சார்பற்ற இதழ் என்பது குறிப்பிடத்தக்கது.

"விருப்பம் இருக்குமானால் எதையும் செய்வதற்குவழி உண்டு' என்றொரு பழமொழி உண்டு. துங்கபத்திரா கால்வாய்பற்றி மக்கள் சபையில் நடைபெற்ற கேள்வி—பதில் தொடரில் ஆந்திரா—மைசூர் மாநில மக்கள் அந்தப் பழைய பழமொழியை நினைவுபடுத்திக்கொள்ள வேண்டியது பொருத்தமானதாகும்.

தென்னகத்தின் தேவைகளைப்பற்றியும், பிரச்சினைகளைப் பற்றியும் மதிப்புக்குரிய வட்டாரத்தில் காட்டப்படும் அலட்சியப் போக்கை ஒரு எடுத்துக்காட்டாக எடுத்துக் கொள்ளவேண்டிய அவசியமில்லை என்றாலும், உயிருட்டமுள்ள ஒரு துணைஅமைச்சரிடம் விடப்பட்டது குறிப்பிடத்தக்கது. ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த "ஒரு எதிர்க்கட்சி உறுப்பினரின் கேள்விக்கு நீர்ப்பாசன மின்சார இலாகா துணை அமைச்சர் செயசுக்லால்ஹாதி 'பணப் பஞ்சத்தின் காரணமாக மத்திய அரசாங்கம் துங்கபத்திரா கால்வாய்த் திட்டத்தின் முதல் கட்டத்தை மட்டும் அனுமதித்திருக்கிறது' என்று பதிலளித்துள்ளார்; தொடர்ந்து விளக்கமளிக்க முற்பட்டு, 'அனுமதிக்கப்பட்ட திட்டப் பகுதி மூலம் 1·83 இலட்சம் ஏக்கர் நிலத்திற்கு நீர்ப்பாசன வசதி கிடைக்கும்' என்றும் தெரிவித்தார். இப்படிக் கூறியிருப்பதின் நோக்கம், அனுமதிக்கப்பட்ட திட்டப்பகுதி தாராளப் போக்குடன் செய்யப்பட்டது என்பதும், எல்லோரும் கட்டாயமாகத் திருப்திபெறவேண்டும் என்பதும் அவரது நோக்கமாகும்.

இரண்டாவது திட்டத்தின் எஞ்சியுள்ள காலத்திலும், மூன்றாம் திட்ட காலத்திலும் திட்ட நிர்மாணத்திற்குக் கிடைக்கக்கூடிய நிதிவசதிபற்றி இரண்டு மாநில அரசுகளும் கூட்டாக ஆராய்ந்து, மாற்றியமைக்கப் பட்ட திட்டம் பற்றி அறிவிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாகப் பிரச்சினைபற்றிய முறை வரையறையைக் குறித்துத் தெரிவித்திருப்பது, 'திட்டம் நிறைவேற்றப்படுவதில் காலதாமதம் ஏற்படும்' என்பதை, முன்னதாக ஒருவாறு அறிவிப்பதாகும்.

இரண்டாவது திட்ட காலத்தில் இந்தத் திட்டம்முழுதும் நிறைவேற்றப்படமாட்டாது என்பதே இதன் பொருள். மூன்றாவது திட்டத்தில் எந்தக் காலவரையறைக்குள் திட்டம் முழுதும் நிறைவேற்றப்படும் என்பதும் இதுவரை புலப்படவில்லை.

அந்நிய நாணயமாற்று வசதியில் நெருக்கடி தீவிரமாக உருவாகி வளர்ந்து வெளிப்படையாகக் காணப்பட்ட நேரத்தில், 'திட்டத்தைக் குறைக்க வேண்டும்' என்று வற்புறுத்தப்பட்டுத் திட்டத்தின் கரு இனங்கள் மட்டும் கவனிக்கப்பட்டு, இறுதியாகத் திட்டம் பெரிதாக்கப் பட்டது. இவ்வாறு ஏன் செய்யப் பட்டது என்பதை இப்போது புரிந்து கொள்ளமுடிகிறது.

வடக்கின் கோரிக்கைகளுக்கும், தேவைகளுக்கும் தென்னாடு தன்னைத் தியாகம் செய்யத் தேசிய உணர்வுடன் இசைந்துவிட்டது என்பதே இப்போது புலப்படுவதாகும்.

பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளைக் குன்றச்செய்யும் முறையில், பண்டித நேரு, கடந்த திங்கட்கிழமை டில்லியில் நடைபெற்ற 29-வது மத்திய நீர்ப்பாசன மின்சார நிறுவனக் கூட்டத் துவக்க உரையில் தீவிரமாகப் பேசி இருக்கிறார். பெரிய நீர்பாசனத் திட்டங்களையே ஆய்ந்துஆராய்ந்து உருவாக்குவதைக் கண்டித்துவிட்டுப், புதிதாக ஓர் உணர்வை உண்டாக்கிக்கொண்டு, சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள்பற்றிப் பேசியிருக்கிறார். பிரதமரின் நேர்மையைக் குறித்து எவரும் ஐயுறவிட்டாலும் சுதந்திரத்திற்குப் பிறகு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் நன்மைகள்பற்றி மக்களிடையே உற்சாக மூட்டியவரும் பண்டித நேருவே என்பதை மறந்துவிடமுடியவில்லை.

ஒரு பத்தாண்டுகளுக்குப் பிறகு எந்தத் திட்டங்களுக்கு முக்கியத் துவமும், வடக்கு வளருவதற்கு முதலிடமும் தரப்பட்டனவோ, அதே திட்டங்கள் கண்டிக்கப்படுகின்றன.

தென்னாட்டின் இன்றியமையாத தேவைகளை வற்புறுத்திப் பரிகாரம் கேட்கப்படும்போது மட்டுமே பொறுப்புள்ள வட்டாரத்தில், பழைய கருத்துகளுக்கு முரண்பட்ட புதிய கருத்துக்கள் உருவாக்கப்படுகின்றன என்று சிலர் பிரசாரம் செய்யவும் இதைப் பயன்படுத்திக் கொண்டு குற்றச்சாட்டுகள் கிளப்பவும் கூடும். ஆனால், பிரதமர் சம்பந்தப்பட்டவரை, அந்தப் பொருள்பட எடுத்துரைப்பது சரியாகாது.

ஆனால், வடநாட்டில் திட்டங்களுக்குத் தாராளமாகப் பல கோடி ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறஉண்மையும், பல தவறுகளின் காரணமாகப் பெருமளவு பணச்செலவு ஏற்பட்டிருப்பதும், இதுவரை தவறுகள் திருத்தப்படாமல் இருப்பதும், மூடி மறைக்க முடியாததாகும்.

'நெடுங்காலமாக இரக்கத்திற்குரிய நிலையில் அவதியுறும் மக்கள் ஆவலுடன் எதிர்நோக்கியிருந்த துங்கபத்திரா திட்டத்திற்கு மட்டும் 'பணம் இல்லை' என்று காரணம் காட்டுவது, நிலைமையைச் சரிக்கட்டிவிடக் கூடியதாக இல்லை. ✱

கண்ணீர்க் கடல்!

சி. பெரியண்ணன்

பச்சைப் பந்தலின்கீழ் பரப்பி யிருந்த மணலின்மேல் மணை போட்டு, மனம்ஒத்த காதலரை அதில் அமர்த்தி, மாலைமாற்றி மங் கல வாழ்த்துப்பாடி மணம்முடித்து வைத்தார்கள் பெற்றவர்கள். சிற் றரும்பு முகையாகித் தேன் மணக் கும் மலராகச் சிரிக்கும்போது,அதில் மது அருந்தும் இன்பதாகம் வண் டுக்கு உண்டாவது இயற்கையின் நியதி அன்றோ; துணை ஏற்ற காத லர்க்கு, பொறுமை அணைபோட்டுத் தடுத்தாலும் உணர்ச்சி அலை ஓயாது மோதிக்கொண்டுதான் இருக்கும்.

வானத்துச் சோலையிலே, கண் சிமிட்டும் விண்மீன்கள், பாங்கிய ராய் பக்கமிருந்து காதல் மொழி பல பேச, "போங்களடி! தாரகைகளே! போக்கிரிப் பேச்சுக்கள் எனக்கு ஒன்றும் பிடிப்பதில்லை! இனிக்க ஒரு மொழி பேசி, இன்பம் பெறுவதற்கு ஏகாந்தம் தேவை!" என்று அவை களை விரட்டிவிட்டு விளையாடிப் பவனி வரும் தண்ணிலவோ, எண்ணம் முழுநிறைவு பெற்று மும்முறை தான் பேசினாள்.

ஆனால், காதலர்களோ, பல நாட் கள் இன்பத்தை நுகர்ந்தார்கள்; நுகர்ந்துகொண்டிருந்தார்கள். "வினையே ஆடவர்க்குயிர்" என்று, கூறியதற்கு இணங்க, வெளிநாடு சென்று பொருள் தேடும் நோக்கத் தோடு, சிந்தித்தான்! 'எந்த நாடு நோக்கி, எப்போது செல்வது?' என்று.

"செல்வம் தேடிவந்துதான், இல் லறம் நடத்தவேண்டும்" என்ற எளிய நிலை அவன் வாழ்க்கையில் இல்லை. வறுமையற்ற — பொருள் பெற்ற உறைவிடத்தில்தான் அவன் பிறந்திருந்தான். தங்கக்கொடி பட ரும்; வங்கம் விளையாடும் கடல் சிப்பி தந்திடும் முத்தும், பவழமும் முற்றத்து மூலையிலே சிந்திக்கிடக் கும் வேந்தன் பெருவாழ்வு, சேர்ந்த குடும்பம்தான், அவன் பிறந்த குடும் பம்! காடு வெட்டி, கத்தை விறகு எடுத்துச்சென்று நகரத்தில் விலை கூறிப் பொருள் தேடி வந்தால்தான் அடுக்களையில் புகை எழும்பும் பல ருடைய வாழ்க்கையைப்போல் அல்ல; அவனுடைய வாழ்க்கை!

பொருள் பல உடையவன்தான்! இருந்தாலும், அப்பொருளை அவன் பொருளாக மதிக்கவில்லை; காரணம்! அது வாழையடி வாழையாக, வளர்ந்துவந்த செல்வமாகலின்; தன்னுழைப்பால் பொருள் தேடித் தக்கோர்க்கு ஈந்து தரணிபால் புகழ் தேட அவன் நினைத்தான்.

மணம் முடிந்து மாதங்கள் இரண்டுதான் உருண்டோடிப் போயின; மயக்கும் மாலைப் பொழுதி னிலே, மான் ஓடும் சோலை ஓரம், புனலாறு பூப்போர்த்தி ஓடும்போது, தென்றல் அசைந்தாடி "ஜில்" என்று வீசும் நேரம்; காதலன் பிரி வினால் கடுந்துயர் ஏற்கப் போகும் காதலிக்கு என்ன சொல்வேன்? அதற்காக! காதலுக்குக் கட மையை அடகு வைக்கும் கயவனாக நான் வாழ்வதா? முடியாது! முடி யவே முடியாது! செந்தமிழர் நெறி விட்டு நடைபோடும் கடை மகனாய் வாழ்வதா? பிரிவுத் துயர்க்காக, கடமையை மறப்பதா? பொருள் தேட வெளிநாடு செல்லும் தமி ழர்க்கு விடைதந்து வழியனுப்பி விட்டு, நான் மட்டும் இங்கே, குடை கட்டி ஆள்வதனால் பயன் என்ன? அதைவிட, தன் நாட்டை உயர்த்த வெளிநாடு சென்று மாண்டு போனால், 'மாண்புமிகு மைந்தனை இழந்தோமே!' என்று, மானத்து மறக்குடி, கண்ணீரைக் காணிக்கை யாக்கி, என் புகழை வரலாற்றுச் சுவடியிலே வரைந்துவிடும்" என் றெண்ணி விரைந்தெழுந்தான்!

"அன்புமிகு காதலியே! கன்னித் தமிழகத்துக் காளையர்கள், செல்வம் தேடும் பொருட்டு, வெளிநாடு செல் லத் தயாராகிவிட்டார்கள். நானும், அவர்களோடு செல்ல விடை தரு வாய்! 'போ' என்று விடை கொடுக் கப் பொங்கி எழும் புன்னகையை மதிமுகத்தில் காட்டிவிடு! உன் மாறாத அன்பை எண்ணி, மழைக் காலம் வருமுன்னர், பொன்னோடு வந்து அடைவேன்! சின்னவாய் திறந்து சிந்திவிடு ஒரு வார்த்தை! சிந்திக்க நேரமில்லை; சிங்கத் தமி ழர்களோ, 'சீக்கிரம்!' 'சீக்கிரம்!' என்ற குரல் எழுப்பி வெளிநாடு நோக்கிப் புறப்பட்டுவிட்டார்கள்! அருகில் வந்து ஒரு வார்த்தை!......! கதவைத் திறக்கமாட்டாயா? திற!......?" என்று கரத்தால் கத வைத் தள்ளித், திடுக்கிட்டு, "என் னருமைத் துணைவி எங்கே!" என் றான்.

தோழி வாய்திறந்து, "கனகவல்லி யோடு புனலாடச் சென்று ஒரு நாழி யாச்சு; ஏனோ, இன்னும் வரக் காணோம்?" என்றாள்.

"விடைகேட்க நேரமில்லை; என்ன செய்வேன்? என்னுயிராம் காதலி யின் தோழியே! 'அறம் காக்க, பொருள்தேட, அண்டை நாடு நோக்கி அருந்தமிழர் புறப்பட்டுவிட் டார்கள். அவர்களோடு, உன் துணைவன் பயணம் கட்டிவிட்டார். உன்னிடத்தில் விடைபெற்று

நடைப்போட, எண்ணி எண்ணிப் பின்பு, தடை சொல்லக் கடையர் குலப் பெண்ணல்ல என் துணைவி! இல்லம் அடைந்த பின்பு, நல்லதைக் கூறிவிடு! காடோ! கடல்வெளியோ! ஆருே! ஆறலைக் கள்வர்களோ! அத்தனை இடர்களையும் கடந்து, பொருள் தேடிவருவான் உன் அத்தான்!' என்று, கூறித் தேற்றுவது உன் பொறுப்பு! நான் சென்று வருகிறேன்!'' என உரைத்துப் புறப்பட்டுச் சென்றுவிட்டான்.

தாமரை பூத்தக் குளத்தினிலே, முகத்தாமரை மூழ்கப் புனலாடிவிட்டு, உடலை ஈரத்துணியால் மறைத்துக்கொண்டு, அழகுநடை பயின்று, அசைந்தாடி, வழி கடந்து மனையை வந்தடைந்தாள். களையாத துணியோடு.

''அத்தான்! இன்னெரு அதிசயத்தைக் கேட்டீர்களா?'' என்ருள், மாற்று உடை அணிந்துகொண்டே.

கண்ணைப்பறித்த குளத்துத் தாமரை மலரைக் கொய்ய, அதிலிருந்த மதுவண்டு கதிமாறிச்,சிறிது அலைந்து, பின், என் முகத்தில் மொய்க்க, அடித்தாலும் என்னை விடவில்லை! அப்பப்பா! அதனேடு நான் பட்டபாடு, கொஞ்சநஞ்சமல்ல ......? ஏன் அத்தான் பேசாமல் இருக்கிறீர்கள்? யோகத்தில் இறங்கி விட்டீர்களா?''

வியப்போடு கூறிக்கொண்டே அறையினுள் சென்று பார்த்தாள். துணைவனைக் காணேம்!

''அல்லி!அல்லி! அத்தான் எங்கே சென்ருர்?''

அவளின் குரல் ஒலி அடங்கா முன்னர், அருமைத்தோழி அனைத்தையும் கூறி, ஆறுதல் மொழியும் கூறி நின்ருள்.

வேதனைத் தாளாமல் கண்ணீரை உதிர்த்தாள். அவளின் அலைபாயும் உள்ளத்தை அமைதியின் மடியிலே விளையாடவைக்க எத்தனிக்கும் பாங்கி,

''காலம் தரும் பரிசு நல்லதும் இருக்கும்; அல்லதும் இருக்கும். கடந்து வந்த காலத்துப் பாதையைத் திரும்பிப் பாராதே! சென்ற கால இன்ப நிகழ்ச்சிகளை மறந்து விடு!'' என்று கூறினுள்.

''எதை மறந்து நான் ஆனந்தமாக இருக்கமுடியும்? அவருடைய ஆண்மையை மறப்பதா? அறிவையும், ஆற்றலையும் மறப்பதா! இவைகளை மறந்து நான் இருக்கமுடியும். ஆனுல், அவர் எங்கு சென்று, எத்தகை இன்னல்களுக்கு ஆளாவாரோ? அதற்குத்தான் நான் பெரிதும் அஞ்சுகிறேன்! என் நலம் எப்படியாவது போகட்டும்! என் உயிரினும் மேலான காதலர்க்கு ஏதேனும் இன்னல் வழி மறித்தால் ......?''

அன்பூறும் உள்ளத்தில் எழும் போராட்ட அலைகள், கண்ணீராகி வழிந்துகொண்டிருந்தது.

தோழி குறுக்கிட்டு,

''ஏனம்மா! இப்படி மனதை அலட்டிக் கொள்ளுகிறீர்கள்! நீங்கள் நினைப்பதுபோல் ஒன்றும் நடந்துவிடாது! சற்று அமைதியாய் இருங்கள்! நான் உணவு கொண்டுவருகிறேன்.'' என்று கூறிச்சென்றுவிட்டாள்.

''என் உயிரே, என்னைப் பிரிந்து சென்றுவிட்டது! எனக்குச் சோறு ஒரு கேடா? என் அன்பர் என்னை வந்தடையும் காலம், சிறிதாகத் தெரியலாம். ஆனுல், அது எனக்கு யுகமாகத் தெரிகிறது! அதைவிட அவர் இப்பொழுது, எங்கு, என்ன துன்பத்திற்கு உள்ளாகித் தவித்துக் கொண்டிருக்கிருரோ? அச்சம் தரும் பாலைவனம்!......? இல்லை! இல்லை! கொல்லும் புலி வாழும் கொடுங் காடு!......?''

என்றேங்கும் வேளையிலே, அருமைத் தோழி, அருகில் வந்து, ''அம்மா! சாப்பாடு...'' அவ்வளவு தான்! ''என்னை வதைக்காதே! எனக்கு ஒன்றும் வேண்டாம்! சென்றுவிடு!'' என்று சுடு முகம் காட்டினுள். 'சட்'டென்று திரும்பிப் போனுள் சமயத்தை உணர்ந்த தோழி!

உணவில்லாச்சோர்வில் கண்துயின்ருள்;அப்போது, கனவில்வந்தகாட்சிகள், கண்விழித்த காலத்திலும், கண்ணிலே நின்று கண்ணீரைக் காணிக்கையாகக் கேட்டது. பல நாட்கள், உணவை நஞ்சாக நினைத்து ஒதுக்கியதின்பலன், துரும்பாய் உடல்மெலிந்து இளைத்துவிட்டாள்; வளையல்களை வழிமறித்துக் காக்கும் தொடியே நெகிழ்ந்துவிட்டது; தலைவாரிப் பூமுடித்துப் பலநாட்கள் ஆகிவிட்டன. கலைந்த கூந்தலோடு தடுமாறும் நடைபோட்டு, அவளுக்கு அடவிபோல் காட்சிதரும் சோலை ஓரம் வந்து நின்ருள். வான் வெளியை வையகம் பார்க்கா வண்ணம் திரையிட்டிருக்கும் மேகத்தைக் கண்டாள்! அதுவும் வெண் மேகத்தை! அத்னேடு சில வார்த்தைகள் பேசத் தொடங்கினுள்.

''நீர் தாங்கா வெண் மேகமே! கடலில் நீர் முகந்து வாராமல் தப்பி ஏன் வந்துவிட்டாய்? இருந்தாலும் பரவாயில்லை! ஒரு காரியம் செய்! காதலர் பிரிவால் என் கண்கள் கடலாயிற்று! நீ, உன் கூட்டத்தோடு வந்து, என் கண்ணீர்க் கடலில், எவ்வளவு நீர் வேண்டுமானுலும் முகந்துகொள்ளலாம். யாரும் தடுக்கமாட்டார்கள்? நானேதான் உத்தரவு தந்துவிட்டேனே!

''மேகங்களுக்கு நீர் கொடுக்கும் கடலே, எங்களுக்கு நீர் கொடுக்காமல் அனுப்பிவிட்டதே! உன் கண்ணீர்க் கடலா எங்களுக்கு நீர்அளிக்கப்போகிறது!'' என்கிருயா? நீர் தாராளமாகஇருக்கிறது! முகரமுகரப் பெருகிக்கொண்டே இருக்கும்! உம் முகந்துகொள்ளுங்கள்!

ஆனுல், ஒன்றை மட்டும் கவனமாகக் கேளுங்கள்! நீரை முகந்துகொண்டு நீங்கள் என்ன செய்ய வேண்டும் தெரியுமா?

செல்வம் தேடும்பொருட்டுச்சென்ற காதலர் செல்லும் கானம், வான் வெயில் பாய்ந்து வரண்டிருக்கும்! வெப்பம் தரும் வேதனையிலிருந்து, அவர் தப்பமுடியாது! அங்கு அவருக்கு நீர் மிகுதியாகத்தேவைப்படும்!

ஆகையால், அன்புகூர்ந்து, என் கண்ணீர்க் கடலில் நீர் முகந்து கொண்டு, கருநிறமாய் விரைந்து சென்று, அவர் இருக்கும் வெம்மையான காடுகளில் நீர்த்துளிகளை வீசி, வெப்பத்தை தணிக்கவேண்டும்! அப்படிச் செய்வீர்களா?''

என்ற பொருளைத் தந்து நிற்கும் நெய்தற்கலிச் செய்யுளைப் படித்தின் புறுங்கள்:

''தாழ்பு, துறந்து தொடி நெகிழ்ந்தான்
போகிய கானம்
இறந்தெரி நையாமற் பாஅய் முழங்கி
வறந்தென்னை செய்தியோ வானம்!
சிறந்தவென்
கண்ணீர்க்கடலாற் கனைதுளி வீசாயோ
கொண்மூக் குழீஇ முகந்து''

★

நாடே நீ கேள்!

கேள்! கேவரில் செய்வழி கிரதுநள்ளாகேள்!

கனகு

கண்விழித்ததும் பரக்கப் பரக்கப் படுக்கையினின்று எழுந்தாள் கண்ணம்மா. தன் சின்னஞ் சிறு மண் குடிசிலின் தட்டிக் கதவைத் தூக்கி ஒருபுறம் சாத்தி வைத்துவிட்டு வெளியில் வந்தாள். இருள் நன்ருகக் கவிழ்ந்து கிடந்தது. வானத்தில் மீன் கூட்டத்தைக்காண முடியவில்லை. முகில் நிறைந்திருந்தது. இரவின் தொடக்கத்தோடு பிடித்த தூற்றல் இன்னும் ஓயவில்லை. அந்தக் குடிசிற் பகுதிக்கு அப்பால் உள்ள சாலையில் ஒளிவீசும் மின்விளக்கின் வெளிச்சம் கூட அன்று தென்படவில்லை.—தென்படவில்லையோ, அணைந்து கிடந்ததோ! தொலைவிலுள்ள மணிக்கூண்டில் 'டங்' என்று ஒரு தடவை மணியடித்தது. 'மணி என்ன இப்போது? நாலரையா, ஐந்தரையா, அல்லது ஒன்றரையா? இன்று விடிவதற்கு முன் எழுந்துவிட்டேனே? ஒருவேளை ஐந்தரைதான் ஆகியிருக்குமா?' மேலும் சிந்தித்துக்கொண்டு வெளியில் நிற்கக் கண்ணம்மாவால் முடியவில்லை. 'இந்த இருளில் ஒன்றுமே தெரியவில்லையே! ஐந்தரையாகிவிட்டிருந்தால் என்ன செய்வது?' திரும்பவும் குடிலுக்குள் குனிந்து நுழைந்தாள் கண்ணம்மா. எங்கோ கிடந்த வத்திப்பெட்டியைத் தேடித் துழாவி எடுத்தாள். எண்ணெய் இல்லாமையால் இரவே எரிய மறுத்த காடை விளக்கை அடுப்பு மேடையிலிருந்து தட்டித் தடவி எடுத்துத், திரியை நன்ருக மேலே இழுத்துவிட்டு, அதைப் பற்றவைத்தாள். குடிசிலின் ஒரு மூலையில் இறைவானத்தில் மறைத்துவைத்திருந்த கந்தல் முடிச்சை மெல்ல எடுத்தாள், அதை அவிழ்த்தாள். 'சரியாக மூன்றே கால் ரூபாய் இருக்கிறது. சரி, கால் ரூபாயை எடுத்துக்கொள்வோம்' என்று தனக்குத்தானே சொல்லிக்கொண்டு, இருபத்தைந்து புதுக் காசுகளை எடுத்து முந்தானையில் முடிந்துகொண்டாள். அதற்குள் எண்ணெய் இல்லாத திரி புகையைக் கக்கிக்கொண்டு அணைந்துவிட்டது. இருளுக்கிடையே அந்த மூன்று ரூபாய் சில்லறையுள்ள கந்தலை முடிந்து, சுருட்டிப் பழையபடி இறைவானத்தில் பத்திரமாக, யாரும் கண்டுகொள்ளாதவாறு செருகி வைத்தாள்.

திரும்பவும் காடை விளக்கின் திரியை மேலே இழுத்துவிட்டாள். பற்றவைத்தாள். அங்கே வரிசையாக முடங்கிக்கிடக்கும்தன்னுடைய நான்கு குழந்தைகளையும் பார்த்தாள்.

'ஆமாம், இப்போது வெளியே கிளம்பிஞல், திரும்பவும் இரவுதானே வர முடியும்.'

"ஏ, ரோசா, ரோசா!"

உரக்க விளித்துத் தன் எட்டு வயதுப் பெண் சரோசாவை எழுப்பிஞள். அந்தச் சிறுமி இரண்டு மூன்று தடவை புரண்டு புரண்டு காட்டிவிட்டுத் திடும் என்று எழுந்தாள்.

விளக்குத் திரி திரும்பவும் புகை கக்கிக்கொண்டு அணைந்துவிட்டது.

"நான் போயிட்டு இராத்திரி வர்ரேன். தம்பியையும், தங்கச்சியையும் பார்த்துக்கீறியா?"

"உம்" என்று குரல் கொடுத்துவிட்டுக் "கஞ்சி?" என்று விஞத் தொடுத்தாள் அந்தப் பிஞ்சு.

"இராத்திரிக்கு அரிசி ரொம்ப வாங்கியாந்து சோருக்கிப் போடுறேன், சோறு."

"வெயிலுக்கு?"

"வெயிலுக்கு! கூடைக்காரி செங்கம்மா வருவா. அவளண்டே, எங்க ஆயி சொன்னிச்சின்னு கேட்டு ரெண்டணுவுக்கு சோறு வாங்கித் தின்னுக்கங்க, கடனுக்கு."

"உகும், செங்கம்மா கடனுக்குச் சோறு தரமாட்டா! நேத்து 'குடுக்க மாட்டேன் போன்னு' தொரத்துனளே!" என்று சிறுமி சிணுங்கிஞள்.

"ம்...ம் என்று முனகிக்கொண்டு தன் முந்தானையில் முடிந்து வைத்த நாலணுவில் இரண்டணுவை எடுத்துச் சிறுமியிடம் நீட்டி "இந்தா, ரெண்டணு, நாலு பேருமா சேர்ந்து, அடிச்சிக்காமே சோறு வாங்கித் தின்னுக்கங்க. சின்னத் தம்பிக்கு ரொம்பச் சோறு குடு!"

"ஊகும்" என்று திரும்பவும் நீட்டிக் கொண்டு சிணுங்கிஞள் சிறுமி. "ரெண்டணுவுக்கு இம்மாத்தம்தான் சோறு குடுக்குரு!" என்று தன் சின்னஞ்சிறு கையைக் குவித்துக் காட்டிஞள் அந்த இருளுக்கிடையே. "ரெண்டணுச் சோறு நம்ப சின்ன தம்பிக்குக்கூடப் பத்தாது!"

திரும்பவும் முனகிக்கொண்டே ஓரணு எடுத்து மூன்றணுவாக நீட்டிஞள் கண்ணம்மா.

"மூணு அணுவுக்கும், சட்டி எடுத்துக்கினு போயி, ரொம்பச் சோறு போடச்சொல்லி வாங்கித்

னுங்க! அடிச்சிக்காமே விளையாடிக் கினு இருங்க!''

'பரக்கப் பரக்க வெளியில் வந்தாள் கண்ணம்மா, மூலையில் சாத்தி வைத்திருந்த கூடையை எடுத்துக் கொண்டு. இன்னும் இருள் அப்படியே இருந்தது. இன்னும் தூற்றல் போட்டுக்கொண்டு கிடந்தது. எங்கும் ஒரே சேறு. தட்டித் தடுமாறிக்கொண்டு, பழக்கத்தின் துணையால் — நிதானமாக அந்தக் குடிசைப் பகுதியிலிருந்து சாலைக்கு வந்தாள் அவள். அங்கிருந்து விறு விறு என்று நடந்தாள் கொத்தவால் சாவடியை நோக்கி.

வழக்கத்தைவிட அன்று காலந் தாழ்ந்துவிட்டது. கண்ணம்மா கொத்தவால் சாவடியின் நுழைவாயிலை அடையும்போது, அங்கிருந்து கண்ணம்மாவையொத்த நூற்றுக்கணக்கான காய்கறிக் கூடைக்காரிகள் அன்றைய விற்பனைக்காகப், பழைய முட்டைக் கோசுகளையும், நாட்பட்ட தக்காளிப் பழங்களையும், வாடிய புதினாத் தழையையும், இன்னும் அத்திறத்து வேறு வேறு காய் வகைகளையும் கூடைகளில் நிரப்பிச் சுமந்தபடி திரும்பிக்கொண்டிருந்தார்கள்.

"ஐயயோ. நேரமாகிப் பூடிச்சே! மொதலாளியண்டே காயிங்க இருக்குதோ, ஆயிப்போச்சோ!'' என்று பதைப்புடன் தனக்குத்தானே பேசியவாறு விரைந்தோடினாள் கண்ணம்மாள். கொத்தவால் சாவடியில் அழுகும் நிலையிலுள்ள, வெம்பலான காய்களை மொத்தம் எடுத்துச் சில்லறை விற்பனை நடத்தும் பகுதியில் கிட்டத்தட்ட முக்கால்வாசிப் பேர் தங்கள் வாணிபத்தை முடித்து விட்டுச் சில்லரையை எண்ணிக் கொண்டிருந்தார்கள். அவர்களில் கண்ணம்மாவுக்கு வாடிக்கையாக விற்பனை செய்யும் நாராயணனும் ஒருவன். கண்ணம்மா காசுகொண்டு வராமல், நாராயணனிடம் கடனுக்கு வாங்கி விற்று, மறுநாள் கொடுத்து விடலாம் என்ற தென்பில்தான் வந்திருந்தாள் அன்று. நிலைமை அங்கு வேறுமாதிரி அமைந்துவிட்டது. வேறு வழியில்லை. நாராயணனிடம் சென்றாள் கண்ணம்மா.

"சாமி, சாமி, மொதலாளி!''

மும்முரமாகச் சில்லரை எண்ணிக்கொண்டிருந்த நாராயணன் நிமிர்ந்து பார்த்தான்.

"இன்னிக்கி நாழியாய் பூடிச்சி. காய் வாங்கிக்கிலே. கையிலே வேறே துட்டு இல்லே. ஒரு மூணு ரூவா கடனாகக் குடுங்கிறீங்களா? சாயந்திரம் கொண்டாந்து தந்துடறேன்''

நாராயணன் சற்று யோசித்தான்.

"என்னண்டே துட்டு இல்லியே!'' என்று முன்னால் கிடந்த சில்லரையை உற்று நோக்கினான். "ஆமா, இன்னிக்கி மழையா வேறே கெடக்குதே! நீ காய் வாங்கிக்கினு போயி எங்கே வச்சி பேரம் பண்ணுவே? உம்......'' "இல்லே மொதலாளி, நான் எப்புடினாச்சும் வித்துக் கின்னுவந்துடுவேன்! மழை பெஞ்சா அதும்பாட்டுக்குப் பெஞ்சுக்கிட்டுப் போவுது!''

"நாளைக்கு வந்து காய் விக்கலே, துட்டு சேரலே. நட்டமாப்பூடிச் சுன்னு சொல்லிக்கிட்டு நிக்கக் கூடாது. — மூணு ரூபா இல்லே. இதோ ரெண்டு ரூவா'' என்று சில்லரையாக எண்ணி எடுத்து நீட்டினான் நாராயணன்.

"மவராசன் நல்லா ஈக்கணும்'' என்று வாழ்த்திவிட்டு, கண்ணம்மா அந்த இரண்டு ரூபாயைப் பெற்றுக் கொண்டு அந்தக் கடை வரிசையின் முடிவில் குவியல் போட்டுக்கிடந்த இடத்தை நோக்கி விரைந்தாள். அங்கே புதுக்காய்களுக்கான விலையை அந்த வெம்பலுக்கும், அழுகலுக்கும் சொல்லிக்கொண்டிருந்தான் விற்பவன். என்ன செய்வதென்று தோன்றாமல் சற்று நேரம் திகைத்து, விழித்து நின்ற கண்ணம்மா ஒரு வகையாக இரண்டு ரூபாய்க்குக் காய்கள் வாங்கிக் கொண்டாள். அன்று அவள் வாங்கிய காய்கள் அவள் கூடைக்குக் கால்கூடைகூட வரவில்லை. நல்ல வெயிற் காலத்தில் சிறுபொழுதில் விலைபோய்விடக்கூடிய சரக்கு.

கூடையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினாள் கண்ணம்மா. சொல்லி வைத்தாற்போல் மழை சோவென்று பெய்யத் தொடங்கியது. மேலே அவளால் நனைந்துகொண்டு செல்ல முடியவில்லை. சென்றாலும், எங்கு போய் யாரிடம் காய்களை விற்பது? ஓரிடத்தில் கூடையை இறக்கி வைத்துவிட்டு ஒதுங்கி நின்று கொண்டாள்.

மழை ஓய்ந்தபோது நடுப்பகல் கடந்துவிட்டது. கூடையைத் தலைமேல் தூக்கிவைத்துக்கொண்ட கண்ணம்மா, அந்த வேளையில் எங்கு கொண்டுபோய் விற்பது என்று தோன்றாமல் திகைப்பும் தடுமாற்றமும்கொண்டாள். அவள் வழக்கமாகக் கடைபரப்பி, காலைவேளையில் விற்பனை செய்யுமிடம் ஒரே சேறும் சகதியுமாகிக்கிடந்தது. மழை விட்டதும் வெயில்வேறு சுள்ளென்று காயத்தொடங்கியது. பொழுது சற்றே சரியும்வரை அவள் எங்காவது நிழற்சரிவுப்பக்கம் ஒதுங்கியிருக்கவேண்டும். பசியை மறந்து, விடாயை அடக்கி உள்ளத்தில் ஏதேதோ எண்ணச்சுமைகளை ஏற்றியபடி காத்துக்கிடந்தாள் அவள்.

அவ்வேளை நாலைந்து மார்வாரிக் குழந்தைகள் புத்தம்புதிய கார்ஒன்றிலிருந்து இறங்கி, எதிரே உள்ள பெரியதொரு கட்டிடத்தை நோக்கி நடப்பது அவள் பார்வையிற்பட்டது. அந்தக் குழந்தைகளின் கொழுமையும், செழுமையுமான தோற்றத்தை விட அவர்கள் அணிந்திருந்த விதவிதமான வண்ணப் பட்டாடைகள் தாம் கண்ணம்மாவின் எண்ணத்தை ஈர்த்தன. பத்துநாட்களுக்கு முன் அதே இடத்தில், அதே குழந்தைகளைப் பார்த்திருக்கிறாள் கண்ணம்மா. அன்று அவர்களைப் பார்த்தபொழுது ஒரு விசித்திரமான நிறைவேற முடியாத—ஆசை அவள் உள்ளத்தே துளிர்விட்டது — தன்னுடைய அருமைச் சேய்களுக்கும் அப்படிப் புதுப்புது, வண்ண வண்ணத் துணிகள் வாங்கிப்போடச் செய்து அழகு பார்க்கவேண்டுமென்று.

"அடே அப்பா! அந்தமாதிரி ஒரே ஒரு துணிமட்டும் வாங்குவதுகூட என்னால் முடியுமா? ஒவ்வொன்று முப்பது, நாற்பது என்றல்லவா இருக்கும். என் வாழ்நாள் முழுதும் இடையறாது உழைத்து உழைத்துப் பாடுபட்டுச் சேர்த்தாலும் முப்பது ரூபாயை என்னால் ஒரு சேரக் காண முடியுமா? — எப்படியிருந்தாலும் என் குழந்தைகளுக்குத் துணிவாங்கிக்கொடுத்துப்போடச் சொல்லிப் பார்த்துத்தான் ஆகவேண்டும். நான்குபேருக்கும் துணிவாங்கிக் கொடுக்க எவ்வளவுதான் குறைந்த விலையானாலும் பத்து ரூபாய்க்கு மேல் ஆகுமே! பணக்காரர்கள் போட்டுக்கழித்த பழைய துணிகள் வாங்குவதாயிருந்தாலும் ஐந்து, ஆறு வேண்டுமே!''

பழைய துணி என்றதும் கண்ணம்மாவுக்கு மூர்மார்க்கெட் நினைவு வந்தது.

'ஓ, அங்கே பழைய துணிகள் விற்கிறுங்களே! நல்ல நல்ல, அழகு அழகான பட்டுத்துணிகள், பகட்டுத் துணிகள் எல்லாம் விற்கிருங்களே—பழைய துணிகள்!'

அமர்ந்திருந்த கண்ணம்மா சடக் என்று எழுந்தாள். கூடையைத் தலை மீது தூக்கிவைத்துக்கொண்டாள். வெயிலையும் பாராமல், தான் பசியோடும், களைப்போடும் இருப்பதையும் எண்ணுமல், விறு விறு என்று நடந்தாள் — உருகி அனலை ஆவியடிவில் எங்கணும் வாரி இறைத்துக்கொண்டிருந்த தார்ச் சாலை வழியாக.

மூர்மார்க்கெட்டுக்குள் நுழைந்தாள் கண்ணம்மா. அங்கு அனற் குழம்போடு கலந்து வீசிய காற்றுக்கிடையே சில்லென்றிருந்த குளிர் நிழல், அவ்வேளை அவள் உள்ளத்தில் பெரும் பேரின்பத்தையே நல்குவதுபோன்றிருந்தது. என்றாலும் அந்த நிழலின்கீழ் சற்றும் அவள் நிற்கவில்லை. அவள் எண்ணமெல்லாம்தான் பழைய துணிக்கடையில் இருக்கிறதே! அவள் நேரே பாட்டை வழியே சென்று இடப்பக்கமாகத் திரும்பி நடந்தாள். அங்கே பழைய இரும்புக்கடைகள், பழைய பெட்டிகள் நிறைந்த கடைகள், பழைய விளக்கு, கத்தி, சிறு சிறு கருவிகள், பழைய கலன்கள்—இப்படிப் பழையனவாகவே விற்பனை செய்யும் அங்காடி வரிசையில் கண்ணம்மா தேடிக்கொண்டு சென்ற பழைய துணிக்கடை ஒருகோடியிலிருந்தது. தலையிற் சுமந்த கூடையோடு அந்தக் கடை எதிரில் நின்ருள் கண்ணம்மா. அங்கே மாட்டப்பட்டிருந்த, குவிக்கப்பட்டிருந்த, அடுக்கிவைக்கப்பட்டிருந்த உடை வகைகளிற் குழந்தைத் துணிகளையே உற்று உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தாள் அவள். 'அம்மம்ம, இந்தக் குழந்தைத் துணிகள்தாம் எத்தனைவகை! எத்தனை வண்ணம்! வியப்பால் விறைத்து, நின்றுகொண்டே இருந்தாள் அவள்.

வழியோடு போகின்ற எத்தனையோபேரைக் கூவிக் கூவி அழைக்கின்ற, கடைக்காரன் கண்ணம்மாவிடம் ஏனென்று ஒரு வார்த்தை கேட்கவில்லை. அவனுக்குத் தெரியாதா — பார்த்தமாத்திரத்திலேயே அவள் துணியொன்றும் வாங்கமாட்டாள், சும்மா வேடிக்கை பார்க்கிருள் என்று. நெடுநேரம் நின்றிருந்த கண்ணம்மா, முன்னல் தொங்கவிடப்பட்டிருந்த ஒரு குழந்தைச் சட்டையைக்காட்டி "மொதலாளி, அந்தத் துணி எம்மாத்தம்?" என்று வினவினுள்.

"அந்தத் துணியெல்லாம் நீ வாங்கமாட்டே!" என்று அசட்டையாகக் கூறிவிட்டு "ஐந்து ரூபாய்!" என்ருன் அங்காடிக்காரன்.

"அடி அம்மா! பழைய துணிக்கு எம்மாம் விலை" என்று தனக்குள் முனகிக்கொண்டாள் கண்ணம்மா.

"இதோ, பாரு. இந்தத் துணி எல்லாம் விலைமலிவு. இது முக்கால் ரூபா. இது ஒரு ரூபா. இது ஒண்ணே கால் ரூபா. இதெல்லாம் ஒண்ணரை" என்று குவிக்கப்பட்டுக் கிடந்த சில துணிகளை எடுத்து எடுத்துக் காட்டிவிட்டுச் சொன்ஞன் கடைக்காரன் — ஏதோ எண்ணியவனுக.

அவன் காட்டிய துணிகளைச் சற்றுநேரம் நின்று பார்த்துக்கொண்டிருந்தாள் கண்ணம்மா. 'ஒண்ணெண்ணும் முக்கா ரூபாயாஞ நாலுங்களுக்கும் மூணு ரூபாயாவது வேணும். மூணுரூபா சேக்கறது எந்தக்காலம்? துணிவாங்கறது எந்தக்காலம்?' தனக்குத்தானே உரக்கக் கூறியவாறு நடந்தாள் கண்ணம்மா.

அன்று மாலை கண்ணம்மா தன் குடிலுக்குத் திரும்பும்போது அவள் மடியில் மூன்று ரூபாய்கள் இருந்தன. அந்த மூன்று ரூபாயில் அவளுக்குச் சொந்தமானது ஒரு ரூபாய் தான். மீதி இரண்டுரூபாயை நாராயணனிடம் மறு நாள் ஒப்படைத்தாலன்றி அவன் கடனுக்குக் காய் கொடுக்கமாட்டான். அந்த ஒரு ரூபாயைத் தனியாக எடுத்து முடிபோட்டுக்கொண்டாள் கண்ணம்மா. அன்று கஞ்சிக்கு என்னசெய்வது? வழியில் இட்டலிக்காரச் சின்னம்மாவிடம் இரண்டணுவுக்கு வடையும், இட்டலியும் வாங்கிக்கொண்டாள்—கடனுக்கு. ஆமாம், அவள் ஒன்றும் சாப்பிட வேண்டியது இல்லை. மறு நாள் காலைவரை இப்படியே சும்மா இருந்துவிடலாம். அது பழகிப் போனது.குழந்தைகள் இன்னும் நன்ருகப் பழகவில்லையே! அவர்களுக்காக அந்த இரண்டணு வடையும்; இட்டலியும்.

அடுத்தடுத்து வந்த நாட்களில் நாள் ஒன்றுக்குக் கால் ரூபாய்தான் அவளால் சேர்க்க முடிந்தது. அதுவும் வழக்கம்போல் இரவு ஒரு வேளை மட்டும் காய்ச்சுகின்ற கஞ்சியில் சோற்றுப் பருக்கைகளைக் குழந்தைகள் உண்ணுமாறு செய்துவிட்டு, வெறும் கஞ்சி நீரை மட்டும் அவள் குடிப்பதன் மூலம் சேர்க்க முடிந்த கால் ரூபாய். எப்படித்தான் வெறும் கஞ்சி நீரை மட்டும் குடித்துவிட்டு அவளால் உலவ முடிகிறதோ!

மாலை வேளை நெருங்கிக்கொண்டு வந்தது. என்றுமில்லாமல் அன்று கண்ணம்மாவுக்கு ஒரே கிறக்கமாக இருந்தது. கண்கள் ஒளியிழந்து போய்விட்டனபோல் தோன்றின. காதுகள் குப்குப் என்று அடைத்துக் கொண்டன. என்ருலும் அவள் தன் மனவலி கொண்டு எல்லாவற்றையும் எதிர்த்து நின்று சமாளிக்கும் முயற்சியில் வெற்றிகரமாக ஈடுபட்டிருந்தாள். கூடையிலிருந்த காய்களை ஓரிடத்தில் கடை பரப்பிக் கொண்டு அமர்ந்தாள்.

காய் விற்பனைக்கு ஏற்ற வேளை காலைவேளைதான். மாலை நேரத்தில் தப்பித் தவறிய சிலர் வந்து வாங்குவதுதான் வாடிக்கை. காலையில் தான் மழை வந்து தடுத்துவிட்டதே அவள் வியாபாரம் நடைபெறுமல். இரண்டு ரூபாய்க் காய்களும் விற்று விடுமா, விற்காதா, அதிலிருந்து அரையோ, காலோ தனக்குக் கிடைக்குமா, கிடைக்காதா என்ற ஐயப்பாட்டில் நெஞ்சம் துணுக்குற்றுக் கொண்டிருக்க, அவள் அமர்ந்திருந்தாள்.

பொழுது ஓடிக்கொண்டிருந்தது. கிறக்கமும், களைப்பும் கண்ணம்மாவைச் சாய்த்துக் கீழே தள்ளிவிடப் பெருமுயற்சி செய்துகொண்டிருந்தன. எங்கிருந்தோ மணி எட்டுத் தடவை அடித்தது. அதற்குமேல் விற்பனையை எதிர்பார்க்க முடியாது. குழந்தைகள் வேறு பசியால் தவித்துத் துவண்டு கிடக்கும். தன்னிடமிருந்த சில்லறையையும், விற்பனையாகியிருந்த காய்களையும் கணக்குப் பார்த்தாள் அவள். சரியாக ஒரு ரூபாய்க்குத்தான் காய்கள் விற்கப்பட்டிருந்தன. மீதிக் காய்கள் அப்படியே கிடந்தன. 'இந்தக் காய்களை நாளைக்கு விற்க முடியாதே! ரூபாய் கூட ஒன்றுதானே சேர்ந்திருக்கிறது, நாராயண மொதலாளிக்குப் பணம் எப்படிக் கொடுப்பேன்? நாளைக்குக் காய் எப்படிக் கடனுக வாங்குவேன்?' ஒரே திகைப்போடு கடையைக் கட்டினுள் கண்ணம்மா.

ஆ

பதிவு எண். எம். 4642 தொலைபேசி எண்.... அலுவலகம் 15 இல்லம் ...118
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது.

அவளால் எழ முடியவில்லை. கண்கள் ஒளியை இழந்தே விட்டனவோ! தலை சுற்றியது. தட்டித் தடுமாறி எழுந்தாள் அவள். கூடையைத் தலைமேல் வைத்துக்கொண்டாள். 'இன்றைக்கு எப்படியாவது சாப்பிட்டு ஆகவேண்டும். நிறையக் கஞ்சி காய்ச்சி வயிறுரச் சாப்பிட வேண்டும். அடே அப்பா, வயிறுரச் சாப்பிடுவதா! இல்லை; கஞ்சி காய்ச்சிப் பருக்கையும் நீருமாகச் சாப்பிட வேண்டும்.'

வழியில் கால் ரூபாய்க்கு அரிசி வாங்கிக்கொண்டாள் கண்ணம்மா. 'ஆமாம், நாளைக்கு நாராயண மொதலாளிக்கு இரண்டு ரூபாய் கொடுக்க வேண்டுமே!' இறைவாணத்தில் செருகி வைத்திருந்த மூன்று ரூபாய்ப் பணம் அவளுக்குத் தென்பை அளித்தது. 'அந்த மூன்று ரூபாயில் ஒன்றேகால் ரூபாயை எடுத்து நாராயண மொதலாளியின் கடனைக் கொடுத்துவிடலாம். நாளைக்கு விடியற்காலையிலேயே போய், மூன்று ரூபாய்க்குக் காய் வாங்கி எப்பாடுபட்டாவது விற்றுவிடலாம். அதிலே ஒரு ரூபாயாவது கிடைக்காமலா போகும்! அப்படியே அடுத்த நாளும் செய்தால் மூன்று ரூபாய் திரும்பவும் சேர்ந்துவிடும். அப்புறம் பிள்ளைகளுக்கு அந்தப் 'பழைய துணி'க் கடையில் துணி வாங்கிவிடலாம்.'

கண்ணம்மா விரைந்து நடந்தாள். போகப்போக இருள் சேர்ந்து கொண்டு வந்தது. அவள் குடிசைப் பகுதியை அடைந்தபோது ஒரே இருள். அங்கே ஒன்றுமே தெரியவில்லை. வழக்கமாக அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் குடிசைகளில் மினுக்கிடும் விளக்கொளி கூடக் காணப்படவில்லை. பின்னும் அவள் நடந்தாள். அவளுக்கு ஒன்றும் புலப்படவில்லை. 'வழிமாறி வந்துவிட்டேனு?' சற்றுத் திகைத்து நின்ருள். இருளிற் பழகிப்போன கண்கள் உற்று நோக்கின. 'என்ன இது! இங்கே குடிசைகளையே காணவில்லையே! இங்கிருந்த குடிசைகள் எல்லாம் மாயமாய் மறைந்துவிட்டனவா?' மேலும் உற்று நோக்கினுள். அங்கொன்றும், இங்கொன்றுமாகக் குடிசைகள் இருந்த இடங்கள் இடிபாடுகளாகக் கிடக்கும் நிலை இலேசாகத் தென்பட்டது அவள் கண்களுக்கு. அந்த இடிபாடுகளை வெறித்துப் பார்த்தவண்ணம் அவள் அப்படியே நின்ருள்.

சற்று நேரத்தில் யாரோ சாலை வழியே பேசிக்கொண்டு போகும் ஒலி கண்ணம்மாவின் காதில்வந்து மோதியது.

"பாவம் இந்தப் பக்கமிருந்த குடிசில்களை எல்லாம் 'திடுதிப்' என்று வந்துதரைமட்டமாக்கிவிட்டார்களே —அரசு ஏவிய அலுவலர்கள்! இங்கு வதிந்து கிடந்த மக்கள் எல்லாம் இப்போது என்ன பாடுபடுகிருர்களோ!"

"ஐயோ, என் பிள்ளைகள் எங்கே போச்சுதுங்களோ! அவங்க கதி என்னுச்சோ! இறைவாணத்திலே துட்டு வெச்சிருந்தேனே, அதை யார் எடுத்துக்கிட்டாங்களோ!"

தடாலென்று கண்ணம்மா கீழே வீழ்ந்தாள். அவள் கூடையிலிருந்த காய்கள் நாற்புறமும் சிதறி ஓடின. அந்த இடிபாடுகளின் நடுவே, கேட்பாரும், பார்ப்பாரும் இன்றி ஏழையொருத்தியின் பாழும் உயிர் பிரிந்து கொண்டிருந்தது.

'நகரின் நடுவில் ஓலைக் குடிசைகள் இருப்பது அருவருக்கத் தக்கது' என்ற அளவோடு மட்டும் பேசி விட்டு, நகருக்காக மக்களா, மக்களுக்காக நகரமா என்பதை ஆய்ந்து பார்க்க நேரமின்றி — வக்கிழந்து—, அந்தக் குடிசைகளில் உறைந்து வந்த ஏழையர்க்கு வேறு வசதி தேடித் தராமலே, திடுதிப்பென்று குடிசைகளைத் தரைமட்டமாக்கும் ஏழை பங்காளர், — நாடு மெச்ச, உலகுபுகழ, பெரியோர்தாங்கிநிற்கச் சிறப்புடன் ஆளுகை நடத்துவதாகச் சொல்லிக்கொள்வோர் ஆட்சியில், எத்தனை மூலை முடுக்குகளில் எத்தனை எத்தனை கண்ணம்மாக்கள் செத்துக்கொண்டிருக்கிருர்களோ? எத்தனை எத்தனை சின்னஞ் சிறு மதலைகள் திக்கற்று, துணையிழந்து தெருத்தெருவாக அலைகிருர்களோ? நாடே நீ கேள்!

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

முன்னேற்றக் கழகம் நிச்சயமாக ஏசலுக்கும் பூசலுக்கும் அஞ்சாது. அதனுலே தேய்ந்துவிடாது நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக அறுதிபோல் வேரூன்றி ஆல்போல் தழைக்கும். அதைமட்டும் மறந்துவிடாதீர்கள்.

நமக்கு அடுத்து இருக்கின்ற பெரிய பிரச்சினை 1962-அந்த 1962-தான் மாற்றுக்கட்சிக்காரர்களுடைய கண்களை உறுத்திக் கொண்டிருக்கிறது — எவரும் எந்த அரசியல்வாதியும் திராவிட முன்னேற்றக் கழகத்தைத்தான் மனதிலே வைத்துக்கொண்டிருக்கிருர்கள்.

நம்முடைய கடமையெல்லாம் 1962-ல் நடைபெறும் பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக — எத்தனை பிரதிநிதிகள்—சட்டமன்றத்திற்குச் செல்லுகிருர்கள்—எத்தனை பிரதிநிதிகள் பாராளுமன்றத்திற்கு போகிருர்கள் என்கிற எண்ணிக்கைத்தான்.

1962-க்குள்ளாக நம்முடைய கவனத்தை வேறு பக்கம் திருப்ப வேண்டாம் — 1962-க்குள்ளாக நம்முடைய சிந்தனையை வேறு பக்கம் திருப்பிவிட பற்பலர் முனைவார்கள்—நாம் அதற்கு இடம் கொடுத்துவிட வேண்டாம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சி வருகின்ற பொதுத்தேர்தலில் சட்டமன்றத்தில் எத்தனை பேர்—பாராளுமன்றத்தில் எத்தனைபேர் என்கிற எண்ணிக்கை தான் நம்முடைய மானத்தைக் காக்கும். அதை நினைவிலே பதித்து வைத்துக்கொள்ளுங்கள்.

காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில் ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.